

# கிறிஸ்தவம்

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## தரம் -9






சமயக் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவம்

## தரம் - 09

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

(2010 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது)

சமயக் கல்வித்துறை
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவம்
ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி
தரம் 9

முதற் பதிப்பு - 2009

சமயக் கல்வித்துறை
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

வெளியீடு
கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக
"நனிலா பப்லிகேஷன் (பிரைவேட்) லிமிட்டடினால"
அச்சிடப்பட்டு வெளியிடபட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தற்போதைய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியர்கள் தமது பாடங்களைக் கற்பிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய அவசியமான கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கு சிறந்த ஒரு வழியாட்டியாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது நீங்கள், உங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளை மாணவர் - மையக் கற்றலுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பதற்கான வழிகாட்டலை வழங்குகின்றது. இன்றைய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மாணவர் மையமாக ஒழுங்கமைப்பதென்பது எமது இலங்கை ஆசிரியருக்கும் வகுப்பறைக்கும் ஒரு புதிய அனுபவமன்று. எவ்வாறாயினும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூலம் மாணவர் மையக் கற்றல் - கற்பித்தல் முறைமையியலுக்கு ஒரு புதிய பண்புக் கூறு கிடைக்கிறது.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது மாணவர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கு அவசியமான பாதையை வழங்குவதோடு மட்டுமல்லாது அதற்கு அவசியமான சூழலை மதிநுட்பத்துடன் கட்டியெழுப்பவும் உதவுகிறது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த அடிப்படையானது ஆசிரியர் என்பவர் வெறுமனே அறிவை ஊடுகடத்துபவராக அல்லாது அறிவில் மாற்றத்தை ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டும் என்னும் தத்துவத்தைக் கொண்டுள்ளது. இச்செயற்பாடானது மாணவரை கற்பவர் என்னும் நிலையிலிருந்து அறிவைத் தேடுபவர் என்னும் நிலையை அடைவதற்கும், இதன் மூலம் புதிய அறிவை உருவாக்கவும் உதவுகின்றது. ஆகவே, ஆசிரியர் என்பவர் மாணவருக்கு புதிய அறிவை ஆய்ந்தறிந்து கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டியாகவும் தூண்டியாகவும் செயற்பட வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த தத்துவமும் செயற்பாட்டு வடிவமைப்பும் பழமையான கற்பித்தல் முறைமையியலையும் சிந்தனைகளால் உண்டாகும் தடைகளையும் தகர்த்தெறிய ஆசிரியர்களைத் தூண்டும் என நம்பப்படுகின்றது. எனவே, ஆசிரியர்கள் புதிய கற்பித்தல் அணுகுமுறைகளையும் கற்பித்தல் முறைகளையும் அவசியம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய ஆயிரமாம் ஆண்டானது மிகப் பரந்த எல்லையற்ற புதிய அறிவின் தோற்றத்தையும் உருவாக்கத்தையும் கண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொருவரும் தமது புதிய செயற்பாடுகளை ஒரு முகப்படுத்தித் திட்டமிடுவதற்குப் பழைய முறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது.

ஆசிரியர் தனது கற்பித்தல் பணியில் பயன்படுத்தக்கூடிய அடிப்படையான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் உயர் அணுகுமுறைகளை நோக்கி அவரை வழிநடத்துவதும் இவ்வகையான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஆசிரியர், இவ் அறிவுரைப்பு வழிகாட்டியை உரிய முறையில் கற்று அதனுடைய நோக்கங்களைக் கொண்டு வகுப்பறையில் உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம், வகுப்பறையை வினைத்திறன் மிக்கதும் தரமானதுமாக்குவதுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை உயர்வடையச் செய்வதற்கும் ஆசிரியர் பெரும் முயற்சி மேற்கொள்ளுவார் என்பது எனது நம்பிக்கையாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் திறம்படத் தயாரித்து வெளியிடுவதற்கு தமது நேரத்தையும் சிறப்புத் திறமைகளையும் பங்களிப்பு செய்த தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த பாட நிபுணத்துவர்களுக்கும் வெளி வளவாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

**பேராசிரியர் லால் பெரேரா**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

யாவருக்கும் கல்வி என்னும் நோக்கத்தை மையமாகக் கொண்டு எமது அரசு நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாகப் பாடநூல்களை வழங்கி வருகின்றது. அத்துடன் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை ஆக்கி வழங்குவதானது கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வகுப்பறைக்குள்ளும் அதற்கு வெளியேயும் மாணவர்களின் அறிவுவிருத்திச் செயற்பாட்டுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே. மேலும், பாடத்திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் முக்கிய நபரும் ஆசிரியரேயாவார். இந் நோக்கத்தை அடைவதற்கு இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குக் கைகொடுக்கும். இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களைக் கற்றுப் பின்பற்றுவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை அதிக பயனுறுதியுடையதாக மாணவர்களுக்கு வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களைச் சார்ந்ததாகும். இப் பொறுப்பை உணர்ந்து செயற்படும் நீங்கள் பெறுமதிமிக்க ஒரு வளம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்கும் பொறுப்பு உங்களுடையதே. தற்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய எதிர்கால சந்ததியை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதே என் எதிர்பார்ப்பாகும். உங்கள் ஆற்றலை உறுதியாக்குவதன் மூலம் அவ் எதிர்பார்ப்பை வெற்றிகரமாக்குவதற்கு இவ் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்கு உதவும் என உறுதியாக நம்புகின்றேன்.

**டபிள்யு.எம்.என்.ஜே புஸ்பகுமார**

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

'இசுருபாய'

பத்தரமுல்ல

12-11-2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கையின் கலைத் திட்டக் கொள்கைளில், பாடசாலைப் பாடத்திட்டமானது, எட்டு வருடங்களுக்கு ஒரு முறை காலத்திற்கு இயைந்ததாக மறுசீரமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கேற்ப, 2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்த கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் இப்பாடத்திட்டமும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியும் அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில், குறித்த பாடத்துடன் தொடர்பான விடயத் தலைப்புகளும் அவற்றின் உள்ளடக்கமும் வழங்கப்பட்டு அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இந்நடைமுறை காரணமாக ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரை ஒன்று உருவானது.

புதிய கலைத்திட்டச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகஞ் செய்யப்படுகின்ற பாடத்திட்டங்களில் அவ்வப்பாடங்களில் மாணவர் அடைந்து கொள்ள வேண்டிய தேர்ச்சிகள் பல, இனங்காணப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய அணுகுமுறை மூலம் அதிக விடயங்களைக் கற்ற அவற்றை நடைமுறையில் செயற்படுத்துகின்ற, தேர்ச்சி கொண்ட மாணவர் சந்ததி ஒன்றை உருவாக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் புதிய பாடத்திட்டத்தைக் கையாளுகின்ற அசிரியர்கள், இவ்வேறுபாட்டைச் சரியாகப் புரிந்து கொள்வதுடன் அதில் விசேட கவனமும் செலுத்த வேண்டும். இந்நூலில் புதியதொரு கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இச்செயலொழுங்கின் கீழ் மாணவர் நூலகத்தைப் பயன்படுத்தல், புத்தகங்கள் வாசித்தல், சுற்றாடல் அவதானித்தல், தகவல் அறிந்தோரை சந்தித்து செய்தி சேகரித்தல், தமது உடன் மாணவரிடமிருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக் கொள்ளல், (இயலுமெனில்) இணையத்தளம் மூலம் தகவல் திரட்டல் போன்ற கண்டறிதல் மூலமான கற்றல் கலாச்சாரம் ஒன்றைக் காண முடிகின்றது.

இதற்கு கல்வி வெளியீட்டத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள பாடப்புத்தகத்தினை உசாத்துணை நூலாகக் கொள்ளலாம். இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்களை மிகச் சரியாகவும், ஒழுங்காகவும், முழுமையாகவும் மாணவர்களை அடையச் செய்வது ஆசிரியர்களின் பணியாகும். இந்த வகையில் ஆசிரியரின் வகிபாகம் பகுத்தறிவு மூலம் போதிக்கப்படுவது அவசியமாகும். இங்கு, மாணவர்கள் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து, பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்களாக மாறுகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றல் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் பரிந்துரைக்கப்பட்ட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாள்வதற்கும், இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள். இதனூடாக புத்தாக்கத் திறனுடைய ஓர் ஆசிரியராகச் செயற்பட்டு, பல்வேறு புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

இந்த புதிய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கின்போது, மாணவர் எப்போதும் செயற்படுபவர்களாகக் காணப்படுவர். இதனால் அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் மாணவர் சில சந்தர்ப்பங்களில் எதிர் கொள்ளுகின்ற கடினப்பாடு ∴ இடர்பாடுகளை நீங்கள் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில், நீங்கள் உதவி செய்யுங்கள். அயலில் உள்ள உடன் மாணவருக்கு உதவி செய்ய மாணவரை வழிப்படுத்துங்கள். இவ்வாறு செயற்படும்போது இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயலொழுங்கானது, சிறந்த கற்றலுக்கு உதவியாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆசியரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை விரிவுபடுத்துவதற்கான கருவியானது, ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை மேலும் பலப்படுத்த கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை, மாணவர் மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக்கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல் - கற்பித்தலை விரிவுபடுத்தும் கருவிகளைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

இதனூடாக புதிய உலகிற்குப் பொருத்தமான தேர்ச்சிகளுடன் கூடிய மாணவர் சந்ததி ஒன்றை உருவாக்கலாம். அதற்குப் பொருத்தமானவாறு ஆசிரியர் வகிபாகமும், வகுப்பறையும். புதிய கற்றல் கலாச்சாரத்திற்கு ஏற்ப உருவாக வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

விமல் சியம்பலாகொட
உதவிப் பணியாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் சமூக விஞ்ஞானம் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலோசனைக் குழுவும் ஆக்கியோர் குழுவும்

| | | |
|---|---|---|
| **பணிப்பு** | | பேராசிரியர் லால் பெரேரா<br>பணிப்பாளர் நாயகம்<br>தேசிய கல்வி நிறுவகம்<br><br>திரு. விமல் சியம்பலாகொட<br>உதவிப் பணிப்பாளர் நாயகம்<br>மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞானப் பிரிவு<br>தேசிய கலவி நிறுவகம் |
| **மேற்பார்வை** | : | கலாநிதி. மாபுல்கொட சுமணரத்தன தேரர்<br>பணிப்பாளர், சமய கல்வித்துறை,<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **ஆலோசனை** | : | கலாநிதி அருட்பணி. ஜயசிரி ரீ. பீரிஸ் |
| **இணைப்பாளர்** | : | முதுமானி அருட்பணி. லொயிட் சாந்திகுமார்<br>கலைமானி அருட்பணி. கமுனு டயஸ் ஜயவர்தன |
| **ஆலோசனைக்குழு** | : | கலாநிதி அருட்பணி. ஜயசிரி ரீ. பிரிஸ்<br>(செயலாளர், இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்)<br>அருட்பணி. எபநேசர் ஜோசப்<br>(தலைவர், இலங்கை மெதடிஸ்த திருச்சபை)<br>அருட்பணி கிங்ஸ்லி பெரேரா<br>(தலைவர், இலங்கை பப்டிஸ்ட் திருச்சபை)<br>அருட்பணி. மு. பியதாச<br>(தலைவர், இலங்கை பிரஸ்பிடேரியன் திருச்சபை) |
| **ஆக்கியோர்** | : | அருட்பணி. கிறிஸ்ரோபர் பால்ராஜ் (BTH, BD)<br>(இலங்கை இறையியல் கல்லூரி, பிலிமத்தலாவ)<br>திருமதி. ரதீக்கா மென்டிஸ் (MA, Dip in Education, Dip in Christianity)<br>(புனித தோமையர் கல்லூரி, கல்கிசை)<br>திருமதி. சித்ராணி டி மெல் (Dip in Christianity)<br>(நிறைவேற்று அதிகாரி, தேசிய கிறிஸ்தவ மன்றம்)<br>திருமதி. ஒலிவியா பொன்சேகா (Dip in Christianity)<br>(C.M.S மகளிர் கல்லூரி)<br>திருமதி. என். எஸ். பி. சந்திரன் (Dip in Christianity)<br>பயிற்றப்பட்ட ஆசிரியை தரம் 1, (ஓய்வுபெற்ற)<br>உதவிக்கல்விப் பணிப்பாளர் (கிறிஸ்தவம், கண்டி மாவட்டம்)<br>திரு. ப. சந்திரன் (Trained Teacher, Principal, SLPSI, Dip in Megt)<br>(செயற்றிட்ட ஆலோசகர் - கட்டுகஸ்தொட்ட கல்வி வலயம்) |
| **அட்டைப்படம்** | : | திருமதி. ஒலிவியா பொன்சேகா |
| **கணினி வடிவமைப்பு** | : | செல்வி. கிறேஸ் போல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

## பகுதி - 1


| | | பக்கம |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | | iii |
| கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி | | v |
| முன்னுரை | | vi |
| ஆலோசனைக் குழுவும் ஆக்கியோர் குழுவும் | | viii |

**பகுதி - I**

| | | |
|---|---|---|
| 9.1.0 | பாடத்திட்டம் | 1 |
| 9.1.1 | அறிமுகம் | 2 |
| 9.1.2 | பாடத்திட்டத்தின் நோக்கம் | 3 |
| 9.1.3 | வகுப்பிற்குரிய தேர்ச்சி | 4 |
| 9.1.4 | பாடத்திட்டம் | 5 |
| 9.1.5 | கற்றல் - கற்பித்தலுக்கான விதிமுறைகள் | 8 |
| 9.1.6 | பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | 9 |
| 9.1.7 | கணிப்பீடும் மதிப்பீடும் | 10 |

**பகுதி - II**

| | | |
|---|---|---|
| 9.2.0 | பாடத்திட்டத்தின் தொடரகம் | 11 |
| 9.2.1 | கற்றல் கற்பித்தல் முறை விளக்கம் | 12 |
| 9.2.2 | தரவிருத்தி உள்ளீடுகள் | 15 |
| 9.2.3 | செயற்பாட்டுத் தொடரகம் | 16 |

**பகுதி - III**

| | | | |
|---|---|---|---|
| 9.3.0 | : | கணிப்பீடும் மதிப்பீடும் | 95 |
| 9.3.1 | : | கணிப்பீடும் மதிப்பீடும் விளக்கம் | 96 |
| 9.3.2 | : | கற்றல் கற்பித்தலை விரிவுபடுத்துவற்கான மதிப்பீட்டுக் கருவிகள் | 98 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி I

### 9.1.0 : பாடத்திட்டம்

9.1.1 : அறிமுகம்

9.1.2 : பாடத்திட்டத்தின் நோக்கம்

9.1.3 : வகுப்பிற்குரிய தேர்ச்சி

9.1.4 : பாடத்திட்டம

9.1.5 : கற்றல் - கற்பித்தலுக்கான விதிமுறைகள்

9.1.6 : பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

9.1.7 : கணிப்பீடும் மதிப்பீடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.1.1. அறிமுகம்

ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமெனில் சமயத்தின் மூலம் மட்டுமே அதனை நிறைவேற்ற முடியும். எனவே சிறு வயது முதல் பிள்ளைகளுக்கு சமயத்தைப் பற்றிய சரியான விளக்கத்தினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அது மட்டுமல்ல பிள்ளைகளின் அன்றாட வாழ்வில் சமய நெறிகளைக் கடைப்பிடித்து வாழச் செய்ய வேண்டும்.

தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட புதிய கலைத் திட்டத்தின் நோக்கமானது சமய பாடத்தை வாழத் தேவையான வழிகளை எடுத்துக் காட்டுவதாகும். அறிவு, திறன், மனப்பாங்கு, செயற்பாடு என்பவற்றை ஒருவரோடொருவர் தொடர்புபடுத்துவதால் வாழ்வில் அதனை ஒரு பழக்கமாக்கிக் கொள்ளலாம். தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையில் ஒரே கருப் பொருள் அல்லது கருப்பொருள்கள் ஒரு தொடர்பான அடிப்படையில் எளிதான முறையில் வெளியிடப்பட்ட ஏதோவொரு முதிர்ச்சி நிலையை நோக்கிச் செல்லும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள கலைத்திட்டத்தின் வழியாக இத்தேர்ச்சிகளை உருவாக்கிக் கொள்ளலாம்.

தரம் - 11 கல்வி கற்று முடிவடைவதோடு பெரும்பாலும் மாணவரது சமயக் கல்வியும் முடிவடைகின்றது. இதனால் சமூக ஆளுமையைக் கட்டியெழுப்புவதோடு தேவைப்படின் சமூகத்தையும் மாற்றமடையச் செய்யக்கூடியவராக இருக்க வேண்டும்.

வாழ்வின் ஒரு கட்டத்தை முடித்துக் கொண்டு இன்னுமொரு கட்டத்தை நோக்கிச் செல்லுகின்ற இவர்களிடம் விருப்பத்தை ஏற்படுத்துவதோடு, மாணவர்களது வாழ்க்கையிலே சமயத்தை வாழ்வளிப்பதற்கு இயலுமானவரை ஆசிரியராகிய உங்களது கற்பித்தல் செயற்பாட்டை முழுமையான அர்ப்பணிப்புடனும், பொறுப்புடனும் நிறைவேற்றி உங்களது முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்பதே எமது ஒன்றிணைந்த எதிர்பார்ப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.1.2 பாடத்தின் நோக்கம்

- படைப்பின் உயர்நிலையாகக் கருதப்படும் மனிதன், மனித செயற்பாட்டினூடாக நல்ல வழியில் செல்வதற்கு இறை படைப்பின் வளர்ச்சிக்கு கைகொடுத்தல்.
- நவீன தொழினுட்பத்தினூடாக இறைவனின் படைப்பை விருத்தி செய்யவும், பாதுகாப்பதையும் முன்னிட்டு உறுதியுடன் செயற்படுதல்.
- இயேசு கிறிஸ்துவின் மூலம் திடப்படுத்தப்பட்டு புதிய மாற்றத்தை நோக்கி சமுதாயத்தைக் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- பொறுப்புடனும், பக்தியுடனும் சமுதாயப் பணியில் அதை வெளிச்சத்தின் மகிமைக்காக சான்று பகருதல்.
- தூய ஆவியின் பெலத்தினால் தூண்டப்பட்டு இறையரசின் விருத்திக்கு அர்ப்பணித்தல்.
- இறைவாக்கினரின் சேவைகளை முன்மாதிரியாகக் கொண்டு நல்ல சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஊக்கமெடுத்தல்.
- திருவிவிலியச் செய்திகளை விசுவாசத்துடன் விளங்கிக் கொள்வதன் மூலமாக மனித நல்வாழ்வினை செயற்படுத்துவதில் ஈடுபடுதல்.
- திருவிவிலியத்தின் மூலமாக நமது ஆன்மீக உணவினைப் பெற்று மெய்யான கிறிஸ்தவ வாழ்க்கை வாழுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.1.3 வகுப்பிற்குரிய தேர்ச்சிகள்

01. படைப்பின் உயர் நிலையாக கருதப்படும் மனிதன், மனித செயற்பாட்டினூடாக நல்ல வழியில் செல்வதற்கு இறை படைப்பின் வளர்ச்சிக்கு கைகொடுப்பர்.

02. நவீன தொழினுட்பத்தினூடாக இறைவனின் படைப்பை விருத்தி செய்யவும், பாதுகாப்பதையும் முன்னிட்டு உறுதியுடன் செயற்படுவர்.

03. இயேசு கிறிஸ்துவின் மூலம் திடப்படுத்தப்பட்டு புதிய மாற்றத்தை நோக்கி சமுதாயத்தை கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுபர்.

04. பொறுப்புடனும், பக்தியுடனும் சமுதாயப்பணியில் அதை வெளிச்சத்தின் மகிமைக்காக சான்று பகருவர்.

05. தூய ஆவியின் பெலத்தினால் தூண்டப்பட்டு இறையரசின் விருத்திக்கு அர்ப்பணிப்பர்.

06. இறைவாக்கினரின் சேவைகளை முன்மாதிரியாகக் கொண்டு நல்ல சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஊக்கமெடுப்பர்.

07. திருவிவிலியச் செய்திகளை விசுவாசத்துடன் விளங்கி கொள்வதன் மூலமாக மனித நல்வாழ்வினை செயற்படுத்துவதில் ஈடுபடுவர்.

08. திருவிவிலியத்தின் மூலமாக நமது ஆன்மீக உணவினைப் பெற்று மெய்யான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.1.4 பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| 1.0 கடவுள் நம்பிக்கை-யுடன் நல்வாழ்வு வாழ்வர் | 1.1 மனுக்குல செயற்பாட்டுக் கூடாக கடவுளின் படைப்பு-களின் வளர்ச்சிக்குதவுவர் | மனுக்குல செயற்பாடுகள்<br>தொ நூல் 11 :1-9<br>கலாத்தியர் 5 : 19 - 26 | 03 |
| | 1.2 நல்வழியினூடாக கடவுளின் படைப்புகளின் வளர்ச்சிக்கு துணை புரிவர் | நல்வழி<br>எசாயா 51 : 4 (அ)<br>2 சாமுவேல் 11 , 12 | 03 |
| | 1.3 ஒழுக்க வாழ்வுக்கூடாக கடவுளின் படைப்புகளின் வளர்ச்சிக்கு உதவுவர் | ஒழுக்க வாழ்வு<br>1 சாமு 24 : 11 - 22<br>2 சாமு 9 : 1 - 13 | 03 |
| | 1.4 ஞானமான செயற்பாட்டுக் கூடாக கடவுளின் படைப்பு களின் வளர்ச்சிக்கு துணை புரிவர் | ஞான செயற்பாடுகள்<br>1 அரசர் 3<br>நீதிமொழிகள் 4, 8<br>1 கொரி 1 : 25 | 02 |
| | 1.5 நல்லாட்சியினூடாக கடவுளின் படைப்புகளின் வளர்ச்சிக்கு உதவுவர் | நல்லாட்சி<br>1 அரசர் 12 : 1 - 24<br>1 கொரி 12 : 12 - 31 | 02 |
| | 1.6 கடவுளின் படைப்புகளை பகிர்வதன் மூலம் அவற்றின் அவற்றின் வளர்ச்சிக்காக செயற்படுவர் | சனத்தொகை விருத்தியும் இறைபடைப்பு பகிர்வும்<br>தொ நூல் 1:26-28, 2:15<br>யோபு 31 : 15 - 18<br>திபணி 2:44-46, 4:32 | 04 |
| | 1.7 நவீன தொழிநுட்பத்தின் ஊடாக கடவுளின் படைப்புகளின் வளர்ச்சிக்கு துணைபுரிவர் | நவீன தொழில் நுட்ப இறைபடைப்பு வளர்ச்சி<br>தொ நூ 2 : 15 | 03 |
| 2.0 இயேசுவின் ஒளியின்படி வாழ்வர் | 2.1 வரலாற்றில் ஒளியாய் வந்த இயேசுவை புரிந்துகொண்டு சமுதாயத்துக்கு ஒளியூட்டுவர் | வரலாற்றில் ஒளி இயேசு<br>யோவான் 1:1-14, 8:2<br>லூக்கா 1:78,79, 2:32<br>திபா 27:1 | 03 |
| | 2.2 ஒளியான இயேசு மூலம் பெற்ற நற்பார்வையின் உடாக சமுதாயத்தை ஒளியூட்டுவர் | வாழ்வின் விளக்கு நற்பார்வை (கண்)<br>லூக்கா 11:33-36 | 01 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| | 2.3 ஒளியான இயேசு மூலம் பெற்ற ஒளியனுபவத்தின் ஊடாக சமுதாயத்தை ஒளியூட்டுவர் | ஒளியனுபவம்<br>மத்தேயு 17:1-1-3 | 01 |
| | 2.4 ஒளியான இயேசு மூலம் பெற்றுக்கொண்ட ஒளிக்கு சான்று பகர்வர் | ஒளிக்கு சான்று பகர்தல்<br>லூக்கா 19:1-10<br>யோவான் 4:1-42 | 02 |
| | 2.5 ஒளியான இயேசு மூலம் பெற்றுக்கொண்ட ஒளியின் ஊடாக இருண்ட இடங்களை ஒளியூட்டுவர் | ஒளியூட்டும் திருப்பணி<br>அன்னை தெரேசா<br>மார்ட்டின் லூதர் கிங் | 02 |
| 3.0 இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணித்து வாழ்வர் | 3.1 தூயாவியின் வலுவூட்டல் மூலம் உறுதியடைந்து இறையாட்சியின் வளர்ச்சிக்கு அாப்பணிப்புடன் செயற்படுவர் | தூயாவியின் வலுவூட்ட-லும் உறுதிப்பாடும்<br>தி பணி 2<br>உரோமை 8:9-10 | 03 |
| | 3.2 தூயாவியின் வலுவூட்டல் மூலம் அடைந்த துணிவுடன் இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவர் | தூயாவியின் வலுவூட்ட-லும் துணிவுடனான செயற்பாடும் எபேசியர் 4<br>தி பணி 3:13-22<br>யோவா 16:4-5 | 03 |
| | 3.3 தூயாவியின் கொடைகளை இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் பாவித்து செயற்படுவர் | தூயாவியின் கொடை-களை செயற்பாட்டுக்கு பாவித்தல்<br>1 கொரி 13, 14 | 03 |
| | 3.4 எசாயாவின் தூய்மையான சமுதாயம் அடிப்படையில் இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவர் | எசாயாவின் தூய்மையான சமுதாயம்<br>எசாயா 1:17-19<br>எசாயா 32:1-8 | 02 |
| | 3.5 எரேமியாயாவின் சமுதாய வலுவூட்டல் அடிப்படையில் இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவர் | எரேமியாவின் சமுதாய வலுவூட்டல்<br>எரேமியா 29, 31:31-34<br>எரேமியா 18:19 | 02 |
| | 3.6 ஆமோசின் நீதியான சமுதாயம் அடிப்படையில் இறையாட்சியின் வளர்ச்சிக்கு அாப்பணிப்புடன் செயற்படுவர் | ஆமோசின் நீதியான சமுதாயம்<br>ஆமோஸ் 5:7-27 | 02 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| | 3.7 'மீக்காவின் சமாதான நோக்கு' அடிப்படையில இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவர் | மீக்காவின் சமாதான நோக்கு<br>மீக்கா 4:1-4 | 02 |
| | 3.8 'ஒசேயாவின் அன்பு மைய மன்னிப்பு' அடிப்படையில் இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவர் | ஒசேயாவின் அன்பு மைய மன்னிப்பு<br>ஒசேயா 2, 11 | 02 |
| 4.0 திருவிவிலியத்தின் அடிப்படையில் அன்றாட வாழ்க்கை வாழ்வர் | 4.1 திருவிவிலியம் எழுதப்பட்ட மூலமொழிகளைக் கற்று திருவிவிலியச் செய்தியின்படி வாழ்வர் | எபிரேயம், கிரேக்கம், அரமேயு மொழிகளில் திருவிவிலியம் | 03 |
| | 4.2 திருவிவிலியத்தின் உலகளாவிய தன்மையை ஏற்று அனைத்து இன மக்களுடனும் ஒற்றுமையாக செயலாற்றுவர் | தேசிய மொழி பெயர்ப்புக் களின் நோக்கம் : திருவிவிலிய மொழி பெயர்ப்புக்கள் திருவிவிலிய மொழி பெயர்ப்புப்-பணியாளர்கள் | 03 |
| | 4.3 சுயமொழியில் மொழி பெயாப்புச் செயயப்பட்ட திருவிவிலியங்களைப் பயன்படுத்தி அதன் செய்தி களைத் தமதாக்குவர் | பிரித்தானிய திருவிவிலிய சங்கம் (1804) உலக திருவிவிலிய சங்கங்கள் இலங்கையின் மொழியும் திருவிவிலியமும் சிஙகள, தமிழ்மொழி பெயர்ப்புக்கள | 03 |
| | 4.4 திருவிவிலியத்தினை பாவித்து ஆன்மீக ஊட்டத்தை பெறலாம் என அறிந்து சுயமொழி திருவிவிலியங்களை அன்றாட ஆன்மீக தேவைகளை தீர்க்க பாவிப்பர் | வாழ்வுக்கு திருவிவிலியம் தரும் ஆன்மீக ஊட்டம் (உணவு) | 02 |
| | 4.5 ஒன்றிணைந்த வாழ்வுக்கு திருவிவிலியத்தின் அடிப் படையை அறிந்து, சுயமொழி திருவிவிலியங்களை அன்றாட ஆன்மீக தேவைகளை தீர்க்க பாவிப்பர் | ஒன்றிணைந்த நிறை வாழ்வுக்கு திருவிவிலியம் | 02 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.1.5 கற்றல் - கற்பித்தலுக்கான விதிமுறைகள்

சமயபாடம் பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட வேண்டியதின் முதல் நோக்கமானது, பிள்ளைகள் மத்தியில் நல்லொழுக்கங்களை அபிவிருத்தி செய்தலாகும். இதன்படி கிறிஸ்தவ சமய பாடத்தின் மூலம் பிள்ளைகளின் மனப்பாங்கு வளர்ச்சியில் மாற்றத்தை வளர்ச்சியடையச் செய்யும் தேர்ச்சிமாற்றமானது; ஆன்மீக சாந்தியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனிமித்தம் இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடித்து அவர் காட்டிய வழிசென்று நமது அன்றாட வாழ்க்கை முறையை சீர் செய்து கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நோக்கங்களை நிறைவேற்றவே பாடத்தின் விடய கருத்துக்களை கவனிப்பதோடு, அந்த பாடத்தில் அடங்கியுள்ள கருத்துக்களையும் பயன்படுத்திக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

9ம் தரம் வகுப்பு மாணவர்களுக்கான இந்த பாடத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும்போது மேற்கூறப்பட்ட விழுமியங்கள் தமது குடும்பத்தில், அபிவிருத்தி செய்வதுடன் வகுப்பிலும், பாடசாலையிலும், முழு சமுதாய வளர்ச்சி வரை வியாபித்து செல்வதற்கு மாணவர்களை ஈடுபடுத்தப்பட உள்ளது. இதற்காகவே பாடத்திட்டத்தில் குறித்த விதிமுறைகள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1) இறைவனின் படைப்புக்களை விருத்தி செய்வதற்கு ஏற்ற வேலைத்திட்டத்தை உருவாக்குதல்
2) தலைமைத்துவ செயலமர்வுகளை நடாத்துதல்
3) நீதியும், நேர்மையும், சமாதானமும் பற்றியவைகளை உள்ளடக்கக் கூடியனவாக கதைகளை உருவாக்குதல் / அமைத்தல்
4) நோயுற்றோருக்கு உதவி செய்தல்
5) சிறுவர், முதியோர் ஆகியவர்களைப் பராமரித்தல் நிலையங்களில் சேவையில் ஈடுபடுதல்
6) ஆலோசனை செயலமர்வுகளை நடாத்துதல்
7) கண்காட்சிகளை நடாத்த ஏற்பாடு செய்தல்
8) கிறிஸ்து பிறப்பு பண்டிகை வேலைத்திட்டங்களை ஏற்படுத்தல்
9) கிறிஸ்தவ நிறுவனங்களால் நடாத்தப்படும் வேலைத்திட்டங்களில் மாணவர்களை பங்கு பெறச் செய்தல்
10) களப் பணயங்களை ஏற்பாடு செய்தல்

இவ்வாறான விதிமுறைகள் மூலம் வகுப்பில் பெற்றுக்கொண்ட அறிவு, அனுபவங்களினூடாக சமயத்திற்கும், வாழ்க்கைக்கும் மிகத் தொடர்பினை கட்டியெழுப்புவதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும். மாணவர்களின் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்றவாறு மேற்கூறப்பட்ட விதிமுறைகளுடன் மாணவர்களை ஈடுபடுத்துவதற்கு இந்த பாடத்திட்டத்தினூடாக ஆசிரியர்களுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.1.6 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

01. பாடசாலைத் தவணைகளில் ஆகக் குறைந்த பட்சம் ஒரு முறையாவது மாணவர்களைத் திருவிருந்தில் வகுப்பு ரீதியாக பங்கு பற்றச் செய்தல்.

02. மாணவர்களின் ஆன்மீக வளர்ச்சிக்காக திருப்பணியாளர்களின் வழிகாட்டலை இயன்ற வகையிலே பெற்றுக்கொள்ளல்.

03. திருவழிபாட்டு ஆண்டில் அந்தந்த காலங்களுக்கேற்ப பொது வழிபாடுகளிலும், பக்தி முயற்சிகளிலும் மாணவர்கள் பங்குபற்றும் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக குருவானவரின் உதவியைப் பெற்றுக்கொள்ளல்.

04. ஒற்றுமை, பொதுத்தன்மை, பொறுமை போன்ற மறைசார்ந்த எண்ணக்கருக்களின் விருத்திக்காக பயிற்சி செயன்முறைகளைப் பாடசாலையில் ஒழுங்கு செய்தல்.

05. கிறிஸ்தவ மாணவர்களுக்கான சிறுவர் கழகங்கள், சபைகள் ஆகியவற்றை ஆரம்பித்து நிறைவான கிறிஸ்தவர்களாக வாழ்வதற்கு மாணவர்களைப் பயிற்றுவித்தலும், பழக்குதலும்

06. பங்கிலுள்ள இரக்கப்பணி புரியும் கழகங்களிலும் சபைகளிலும் இணைந்து கொள்ளப் பெற்றோருக்கு அறிவுரை வழங்கல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.1.7 கணிப்பீடும் மதிப்பீடும்

- எல்லாப் பாடங்களின் முடிவிலும் எழுத்துப் பயிற்சிகள் ஒப்படைகள் வழியாக
- தவணை இறுதியிலும், வருட இறுதியிலும் நடத்துகின்ற முறைசார் பரீட்சைகள் வழியாக.
- குறுகிய காலத்திட்டங்கள் வழியாக.
- வாசிப்பு, எழுத்து, கேட்டல் போன்றவற்றினால் மறை அறிவை வாய்மொழி மூலம் மதிப்பிடல்.
- மறைச் செயற்பாடுகளிலும், பொது நலப் பணிகளிலும் ஈடுபடுகின்றமையை மேற்பார்வை செய்வதன் வழியாக
- திருச்சபைகளின் திருப்பணிகளில் / சேவைகளில் சேர்ந்து ஆற்றும் பணிகள் வழியாக.
- பாடசாலையில் நிறுவப்பட்டுள்ள கிறிஸ்தவம் சார்ந்த சபைகள், கழகங்களில் சேர்ந்து ஆற்றும் பணிகள் வழியாக.
- வகுப்பறையில் தலைமைத்துவத்தைப் பெற்று பொறுப்பேற்றலை மேற்பார்வை செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி II

**9.2.0** : பாடத்தின் தொடரகம்

**9.2.1** : கற்றல் கற்பித்தல் முறை விளக்கம்

**9.2.2** : தரவிருத்தி உள்ளீடுகள்

**9.2.3** : செயற்பாட்டுத் தொடரகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.2.1 கற்றல் கற்பித்தல் முறை விளக்கம்

இக்கற்கை நெறிக்குரிய கற்றல் - கற்பித்தல் முறையினைத் தீர்மானிக்கையில், தேடியாராய்தலை அடிப்படையாகக்கொண்டு, மாணவரது தேர்ச்சிகளை உருவாக்கத்தக்க வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிடுவது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறாகத் தேர்ச்சிசார் கல்விக்காக ஆயத்தமாகும்போது, ஆசிரியரது வகிபாகத்திலும் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகின்றது.

பண்டைக் காலந்தொட்டு பரவலாக நடைமுறையில் இருந்த மரபு ரீதியான கடத்தல் வகிபாகம (Tranmission Role) பிற்காலத்தில் அறிமுகம் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல் வகிபாகம் (Transaction Role) என்பன எமது வகுப்பறைகளில் தற்போதும் கூட அரசோச்சுவதைக் காண முடிகின்றது. இன்று பாடசாலையை விட்டுச் செல்லும் பிள்ளைகளின் கற்பனைத் திறன்கள், தனிப்பட்ட திறன்கள், சமூகத்திறன்கள் போன்றவையெல்லாம் சீர்குலைந்துள்ள நிலையில், கற்றல் - கற்பித்தல் முறையினை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அதனை எவ்வாறு செய்வது என்பதையும் இனங்காணல் கடினமாகவுள்ளது.

கடத்தல் வகிபாகத்தில், தாம் கற்கவேண்டிய அனைத்தையும் அறிந்தவர் ஆசிரியரே என மாணவர் ஏற்றுக் கொள்வர். மாணவருக்கு எதுவுமே தெரியாது எனக் கருதும் ஆசிரியர் தமது அறிவை மாணவருக்கு கடத்துபவராகச் செயற்படுகின்றார். ஆசிரியரிடத்தே இருந்து மாணவருக்கு அறிவு கடத்தப்படுதல் மாத்திரம் இடம்பெறும். இவ்வகிபாகம் விரிவுரை போன்றதாகவே அமையும். இக்கற்றல் - கற்பித்தல் செயன்முறை மாணவரது சிந்தனையை - கற்பனையைத் தட்டியெழுப்புவதிலே அவர்களது ஆளிடை மற்றும் சமூகத்திறன்கைள விருத்தி செய்வதிலே கணிசமான பங்களிப்பைச் செய்வதில்லை.

ஆசிரியர் வகுப்பறையில் நடத்தும் கலந்துரையாடல், கொடுக்கல் - வாங்கல் வகிபாகத்தின் தொடக்கமாம். ஆசிரியருக்கும் மாணவருக்கும், பின் மாணவருக்கும் ஆசிரியருக்கக் இடையிலான கருத்துப் பரிமாற்றம், அதனைத் தொர்ந்து உருவாகும் மாணவருக்கக் மாணவருக்கும் இடையிலான இடைத்தொடர்புகளும் படிப்படியாக ஓர் உரையாடலாக மாற்றம் பெறும். அறிந்தவற்றில் இருந்து அறியாதவற்றுக்கும், எளிமையானவற்றிலிருந்து சிக்கலானவற்றிற்கும் காட்சி (தூல) நிலையில் இருந்து கருத்து நிலைக்கும் மாணவரை இட்டுச் செல்வதற்காக ஆசிரியர் தொடர்ந்து வினாக்களை விடுப்பர்.

தேர்ச்சிசார் கல்வியில் மாணவரது பணிகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. வகுப்பில் ஒவ்வொரு மாணவனும் மாணவியும் அந்தந்தத் தேர்ச்சியில் குறைந்த பட்சம், அண்ணளவாகவும், பாண்டித்திய மட்டத்தையேனும் அடையத்தக்க வகையில் தலையிட்டு, வளவாளராக (Resource Person) ஆசிரியர் செயற்படுவார். கற்றலுக்குத்தேவையான உபகரணங்கயும் ஏனைய வசதிகளையும் மாணவரது இயலுமைகளையும் இயலாமைகளையும் இனங்காணல். தேவையான முன்னூட்டலும் பின்னூட்டலும் வழங்கி மாணவரது கற்றலை மேம்படுத்தல், வகுப்பறைக்கு அப்பாலும் கற்றல் - கற்பித்தலை இட்டுச் செல்வதற்காக, பொருத்தமான உபகரணங்களைத் தயார்ப்படுத்தல் போன்றவை எல்லாம் ஆசிரியரால் ஆற்றப்பட வேண்டிய அடிப்படைப் பணிகளாகும். மேற்போன்றவாறான பணிகளை உள்ளடக்கிய ஆசிரியர் வகிபாகமே நிலைமாற்ற வகிபாகம் (Transformation) எனப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் முதலாம் பகுதியில் பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தத்தக்க செயற்பாட்டுத் தொடர் இரண்டாம் பகுதியில் அடக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாடும் குறைந்தபட்சம் மூன்று படிமுறைகள் அடங்கும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மாணவரைக் கற்றலின்பால் ஈர்ப்பதே செயற்பாட்டின் முதலாவது படிமுறையினால் தொடர்புறுத்தும் படிமுறை (Engagement Step) எனப்படுகிறது. இதன் தொடக்கத்தில் ஆசிரியர் கொடுக்கல் வாங்கல் வகிபாகத்தின் பண்புகளை வெளிக்காட்டியவாறு மாணவருடன் உரையாடுவர். இது பின்னர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளுடன் தொடர்புடைய முன்னறிவு நினைவு கூரப்படும். மேலும், செயற்பாடுகள் குறித்த கோடிகாட்டல்களும் வழங்கப்படும். இவ்வாறான கருத்துப் பரிமாற்றத்துக்காக ஆசிரியர் பல்வேறு உத்திகளைக் கையாளலாம். வினாக்கள் கேட்டல், படங்களைக் காட்சிப்படுத்தல், புதினத்தாள் நறுக்குகளை முன்வைத்தல், காட்டி மறைக்கும் அட்டைகளைக் (Flaha Cards) காட்டுதல் போன்ற தூண்டல் முறைகளைக் கையாளுதல், பிர்சினைகள், புதிர்கள், விவகார ஆய்வு போன்றவற்றை முன்வைத்தல், உரையாடல் போலச் செய்தல், படம், செய்துகாட்டல் போன்றவற்றை முன்வைத்தல், ஒலி நாடாக்கள், ஒலி ஒளி நாடாக்கள் போன்றவற்றைப் பயன்படுத்தல் போன்ற பல்வேறு உத்திகளை இதற்காக ஆசிரியர் பயன்படுத்தலாம். சுருக்கமாகக் கூறுவதாயின், பின்வரும் மூன்று நோக்கங்களையும் அடைவதைக் கருத்திற்கு கொண்டே செயற்பாட்டின் முதலாவது படிமுறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

வகுப்பின் கவனத்தைக் கவர்தல்

தேவையான முன்னறிவை நினைவு கூர்வதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளித்தல்

செயற்பாட்டின் இரண்டாம் படிமுறையின்போது மணவரை ஈடுபடுத்த எதிர்பார்க்கும் தேடியாய்வின் அடிப்படை அம்சங்களை அம் மாணவர்க்கு அறிமுகம் செய்தல்.

மாணவர்க்கு கண்டறியும் வாய்ப்பை வழங்குவதற்காவே செயற்பாட்டின் இரண்டாம் படிமுறை திட்டமிடப்பட்டுள்ளது. கண்டறிதலுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தற் படிவத்தை அடிப்படையாகக் கொண்டே மாணவர் கண்டறிகையில் ஈடுபடுவர். பிரச்சினையின் வெவ்வேறு அம்சங்களைக் குழுநிலையில் கண்டறிந்து ஒத்துழைத்துக் கற்கத்தக்க வகையில் இக்கண்டறிகையை ஆசிரியர் திட்டமிடல் வேண்டும். தரப்பட்டுள்ள மூல வளங்களைப் பயன்படுத்தி விழிப்புணர்வுடன் குழு கலந்துரையாடலை நடத்தியவாறு மாணவர்கள் கண்டறிகையில் ஈடுபடுதல் இப்படிமுறையின் சிறப்பியல்பாகும். தொடர்ந்தும் இவ்வாறான குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதினால் தன்னடக்கம், ஏனையோாரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் ஒற்றுமையாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவி புரிதல், நேர முகாமை, உயரிய தரமுடைய உற்பத்திகளைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கியமான தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வதற்கு இப்படிமுறையூடாக மாணவர்க்கு வாய்ப்புக் கிடைக்கும்.

கண்டறிக்கைக்காக மாணவரை வழிப்படுத்துகையில் குழுக்களின் தலைமைத்துவம் குறித்து ஆசிரியர் முடிவெடுத்தலாகாது. மாறாக, மாணவர் குழுவில் ஒருவர் தலைவராக உருவெடுப்பதற்கான சூழிநிலையை உருவாக்ககுல் ஆசரியரின் பொறுப்பாகும். இலை மறைகாயாகக் காணப்படும் ஆற்றல்கள் வெளிக்கொணரப்பட்டு, தருணத்திற்கு ஏற்ப தலைமைத்துவத்தை ஏற்கும் வாய்பபு மாணவருக்குக் கிடைக்க இது வழிகோலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் முதலாம் பகுதியில் பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தத்தக்க செயற்பாட்டுத் தொடர் இரண்டாம் பகுதியில் அடக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாடும் குறைந்தபட்சம் மூன்று படிமுறைகள் அடங்கும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மாணவரைக் கற்றலின்பால் ஈர்ப்பதே செயற்பாட்டின் முதலாவது படிமுறையினால் தொடர்புறுத்தும் படிமுறை (Engagement Step) எனப்படுகிறது. இதன் தொடக்கத்தில் ஆசிரியர் கொடுக்கல் வாங்கல் வகிபாகத்தின் பண்புகளை வெளிக்காட்டியவாறு மாணவருடன் உரையாடுவர். இது பின்னர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளுடன் தொடர்புடைய முன்னறிவு நினைவு கூரப்படும். மேலும், செயற்பாடுகள் குறித்த கோடிகாட்டல்களும் வழங்கப்படும். இவ்வாறான கருத்துப் பரிமாற்றத்துக்காக ஆசிரியர் பல்வேறு உத்திகளைக் கையாளலாம். வினாக்கள் கேட்டல், படங்களைக் காட்சிப்படுத்தல், புதினத்தாள் நறுக்குகளை முன்வைத்தல், காட்டி மறைக்கும் அட்டைகளைக் (Flaha Cards) காட்டுதல் போன்ற தூண்டல் முறைகளைக் கையாளுதல், பிர்சினைகள், புதிர்கள், விவகார ஆய்வு போன்றவற்றை முன்வைத்தல், உரையாடல் போலச் செய்தல், படம், செய்துகாட்டல் போன்றவற்றை முன்வைத்தல், ஒலி நாடாக்கள், ஒலி ஒளி நாடாக்கள் போன்றவற்றைப் பயன்படுத்தல் போன்ற பல்வேறு உத்திகளை இதற்காக ஆசிரியர் பயன்படுத்தலாம். சுருக்கமாகக் கூறுவதாயின், பின்வரும் மூன்று நோக்கங்களையும் அடைவதைக் கருத்திற்கு கொண்டே செயற்பாட்டின் முதலாவது படிமுறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

வகுப்பின் கவனத்தைக் கவர்தல்

தேவையான முன்னறிவை நினைவு கூர்வதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளித்தல்

செயற்பாட்டின் இரண்டாம் படிமுறையின்போது மணவரை ஈடுபடுத்த எதிர்பார்க்கும் தேடியாய்வின் அடிப்படை அம்சங்களை அம் மாணவர்க்கு அறிமுகம் செய்தல்.

மாணவர்க்கு கண்டறியும் வாய்ப்பை வழங்குவதற்காவே செயற்பாட்டின் இரண்டாம் படிமுறை திட்டமிடப்பட்டுள்ளது. கண்டறிதலுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தற் படிவத்தை அடிப்படையாகக் கொண்டே மாணவர் கண்டறிகையில் ஈடுபடுவர். பிரச்சினையின் வெவ்வேறு அம்சங்களைக் குழுநிலையில் கண்டறிந்து ஒத்துழைத்துக் கற்கத்தக்க வகையில் இக்கண்டறிகையை ஆசிரியர் திட்டமிடல் வேண்டும். தரப்பட்டுள்ள மூல வளங்களைப் பயன்படுத்தி விழிப்புணர்வுடன் குழு கலந்துரையாடலை நடத்தியவாறு மாணவர்கள் கண்டறிகையில் ஈடுபடுதல் இப்படிமுறையின் சிறப்பியல்பாகும். தொடர்ந்தும் இவ்வாறான குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதினால் தன்னடக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் ஒற்றுமையாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவி புரிதல், நேர முகாமை, உயரிய தரமுடைய உற்பத்திகளைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கியமான தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வதற்கு இப்படிமுறையூடாக மாணவர்க்கு வாய்ப்புக் கிடைக்கும்.

கண்டறிக்கைக்காக மாணவரை வழிப்படுத்துகையில் குழுக்களின் தலைமைத்துவம் குறித்து ஆசிரியர் முடிவெடுத்தலாகாது. மாறாக, மாணவர் குழுவில் ஒருவர் தலைவராக உருவெடுப்பதற்கான சூழிநிலையை உருவாக்ககுல் ஆசரியரின் பொறுப்பாகும். இலை மறைகாயாகக் காணப்படும் ஆற்றல்கள் வெளிக்கொணரப்பட்டு, தருணத்திற்கு ஏற்ப தலைமைத்துவத்தை ஏற்கும் வாய்ப்பு மாணவருக்குக் கிடைக்க இது வழிகோலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டின் மூன்றாம் படிமுறையின்போது, ஒவ்வொரு குழுவுக்கும் தாம் கண்டறிந்தவற்றை அதாவது தமது கண்டறிகையின் பெறுபேறுகளை ஏனையோரும் அறிந்துகொள்ளும் பொருட்டு, முன்வைப்புகளை வைப்பதற்கு மாணவரைத் தூண்டுவதே இங்கு ஆசிரியரின் பணியாகும்.

ஒவ்வொரு மாணவருக்கும் பொறுப்புக்களை ஆற்றும் வாய்ப்புக் கிடைக்கும் வகையில் முன்வைப்பைத் திட்டமிட்டுக் கொள்ளுமாறு மாணவரை வழிப்படுத்தல் பயனுடையதாகும். வழக்கமாக ஆசிரியரின் குரல் ஒலிக்கும் வகுப்பறையில் மாணவரின் குரல் ஓங்கி ஒலிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றமை, மாணவர் தாம் கண்டறிந்தவற்றுக்கு விளக்கமளித்தலுடன் (Explanation) தொடர்புடைய இப்படிமுறையின் சிறப்பியல்பாகும்.

திருவிவிலியம் பற்றிய ஆய்வு வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். எனினும் திருவிவிலிய அறிவு மாத்திரம் வாழ்க்கைக்குப் பயனளிப்பதில்லை. மாறாக அவ்வறிவு வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். வகுப்பறையில் மட்டுமன்றி அதற்கு வெளியேயும் பின்பற்றப்பட வேண்டும். இதனை எவ்வாறு மேற்கொள்வது என்ற வினாவுக்கு விடை தேடினால் பல்வேறு வழிமுறைகள் மூலம் இதனை மேற்கொள்ளலாம். வகுப்பறையில் கற்கின்ற அம்சங்களும் செயல்முறைகளும் வாழ்க்கைளில் நடைமுறைக்கு வர வேண்டும். அப்போது தான் திருவிவிலியம் மீதான பற்று ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.2.2 தரவிருத்தி உள்ளீடு

- திருவிவிலியம்
- 9ந்தர பாடநூல்
- படம்
- சித்திரம்
- நாளாந்த பத்திரிகை செய்திகள்
- சுற்றறிக்கை
- மண் விளக்கு (சிட்டி விளக்கு)
- (ஆத்ம பிரகாசம்) ஆன்மீக செய்திகள் (அருளுரைகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 1.0 | : | கடவுள் நம்பிக்கையுடன் நல்வாழ்வு வாழ்வர் |
| தேர்ச்சி மட்டம் 1.1 | : | மனுக்குல செயற்பாட்டுக்கூடாக கடவுளின் படைப்புகள் வளர்ச்சியடைவதற்கு உதவுவர். |
| செயற்பாடு | : | மனுக்குல செயற்பாட்டுக்கூடாக் கடவுளின் படைப்புகளின் வளர்ச்சிக்கு ஈடுபடுவோம் |
| நேரம் | : | 120 நிமிடங்கள் |

தரவிருத்தி உள்ளீடுகள்

- திருவிவிலியம் தொடக்கநூல் 11 : 1 - 9
  கலாததியர் 5 : 19 - 26
- இணைப்பு 1.1.1, 1.1.2
- நிறப்பேனை
- டிமைன் கடதாசி

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படிமுறை 1.1.1

- இணைப்பு 1.1.1 இலுள்ள தகவல் கோவையை வாசியுங்கள்
- இறை நம்பிக்கையை மனிதனுக்கு ஒப்படைத்தல் மூலம் எதிர்பார்க்கப்படும் இறை சித்தத்துக்கு என்ன நடக்கும் என்பது பற்றி கலந்துரையாடுவர்.
- இறைவனது படைப்புகளின் விருத்திக்கு நல்ல மனித குலத்தின் செயற்பாடுகள் தேவையாகும் என்பதை வெளிப்படுத்துங்கள்
- நல்ல செயற்பாடுகளுக்கு அவசியமான பண்புகளை பெற்றுக்கொள்வதற்கு தூயாவியானவரின் வழிகாட்டல் கிடைக்கும் முறைபற்றிய அனுபவங்களை பகிர்ந்து கொள்ள வழிசெய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் கலரந்துரையாடலில் ஈடுபட வழிகாட்டுங்கள்

- வரலாற்றில் ஒரு சந்தர்ப்பத்தில் மக்கள் ஒரு எல்லைக்குட்பட்டு வாழ்வதற்கு திட்டமிட்டதை இறைவன் விரும்பவில்லை என்பது (தொ நூ 11 : 1 - 9)
- மனிதன் மற்றவர்களிலிருந்து விடுபட்டு தன்னைப்பற்றி மட்டும் நினைத்து செயற்படுவதை நீக்கவேண்டும் என்பது
- இறைவன் விரும்புகின்ற மனிதன் அந்த மனிதர்களுக்கிடையில் காணக்கூடிய நல்ல பண்புகளையும் செயற்பாடுகளையும் மேலும் விருத்தி செய்துகொள்ளல் என்பது

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 1.1.2

- வகுப்பில் மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்

  இணைப்பு 1.1.2 டிமைன் கடதாசி, நிறப்பேனை பெற்றுக் கொடுங்கள்
- வேலைகளை ஒப்படைத்து குழு ஆய்வினை மேற்கொள்ளச் செய்க
- எல்லாக் குழுக்களும் கருத்துக்களை முன்வைக்க ஆயத்தப்படுத்துங்கள்

(40 நிமிடங்கள்)

படிமுறை 1.1.3

- சிறிய குழுக்களின் வெளிப்படுத்தலை எல்லாக் குழுக்களுக்கும் முன்வைக்க வழிப்படுத்துங்கள்
- இணைப்பின் (1.1.2) இல் தொடர் இலக்கத்தின்படி சந்தர்ப்பம் பெற்றுக்கொடுங்கள்
- ஏனைய குழுக்களினது முன்னேற்றமான கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தி கலந்துரையாடலில் ஈடுபட வழிகாட்டுங்கள்

- பாபேல் பலிபீடத்ததை அமைத்த செயற்பாடானது அந்த மக்களின் சுயநலத்தின் படியாகும் என்பது
- உலகில் முதல் நிலையிலுள்ள மனிதனின் செயற்பாடுகள் யாவும் உலக முன்னேற்றத்துக்காகவேயாகும் என்பது
- மனிதனின் சுயநலப்போக்கு இறை நம்பிக்கையை பாதுகாப்பதற்கும் விருத்தி செய்வதற்கும் இடையூறாகும் என்பது
- இறை தொடர்பினை பாதுகாக்க மனிதன் மனிதனுக்கும், சூழலுக்குமிடையில் இருக்கின்ற தொடர்பாகும் என்பது
- சிறந்த தொடர்புகளுக்காக தூய ஆவியானவரின் வழிக்காட்டலூடாக செயற்படுவது அவசியமாகும் என்பது

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. தன்னலமற்ற மனித செயற்பாட்டினூடாக இறை படைப்புகளை விருத்தி செய்து கொள்ள முடிவதைப்பற்றி எழுதிக்காட்டுவர்

2. இறையாட்சியின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் நல்ல பண்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் தீர்மானிப்பர்

3. இறை படைப்பின் ஒரு பகுதியான மனிதன் - மனிதனுடன் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டியது தூயாவியானவரின் பலத்தினால் ஆகும் என்பதை விளங்கிக் கொள்வர்

## தகவல் கோவை இணைப்பு 1.1.1

அதிக முன்னேற்றத்துடன் உலகம் முழுவதும் பரவிச் செல்வதற்கு இறைவன் மனிதனை படைப்பாயாக முழு பூமிக்கும் பலத்தை நிலைநிறுத்துவதைக் கூறுவாயாக. இருந்தும் பாபேல் பலிபீடத்தை நிறுவிய சமயத்தில் மனிதர்கள் உலகில் ஓர் இடத்தில் ஒன்று கூடி வாழ முயற்சித்தார்கள். இச்செயலால் இறைவனது விருப்பம் நிறைவேறவில்லை. இறைவனின் விருப்பத்தை அலட்சியப்படுத்தியமையே மூலகாரணமாக அமைந்தது. இதனூடாக உலக விருத்தி மட்டுமல்லாது இறை அரசில் கிடைக்காது போனது.

இறை அரசு கிடைக்க தூயாவியானவரின் வழிகாட்டலைத் தேடல் வேண்டும். அவ்வழிகாட்டலினூடாக தூயாவியானவரின் பலன் கிடைக்கும். அந்த பலனானது இறைவனுக்கும் மனிதனுக்குமிடையில் இருக்கும் தொடர்பை போன்றும் இறைபடைப்பாகிய மனித மனிதருக்கிடையிலும் மனித - சூழலுக்குமிடையிலுள்ள தொடர்பு வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

## இணைப்பு 1.1.2

1. பாபேல் அமைப்பதற்கு முற்காலத்தவர் இறைவனின் விருப்பத்தை பற்றி விளக்கம் இல்லாது செயற்பட்டதை காட்டுவதற்குரிய காரணம் யாதென முன்வையுங்கள்.

2. இறை அரசின் பெறுமதிகளை பெறுகின்ற செயல் மூலம் இறை தொடர்பினை போன்று மனித குல தொடர்பும் விருத்தியடைகின்ற முறையை விளக்குக.

3. தூயாவியானவரின் பலனில் வாழ்வதின் ஊடாக சமூகத்துக்கும் சூழலுக்கும் எண்ணியவாறு நடக்கும் முறையை விளக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 1.0 | : | கடவுள் நம்பிக்கையுடன் நல்வாழ்வு வாழ்வர் |
| தேர்ச்சி மட்டம் 1.2 | : | நல்வழியினூடாக கடவுளின் படைப்புகளின் வளர்ச்சிக்குத் துணை புரிவர் |
| செயற்பாடு 1.2 | : | நல்வழியினூடாக கடவுளின் படைப்புகளின் வளர்ச்சிக்கு உதவுவோம் |
| நேரம் | : | 120 நிமிடங்கள் |

தரவிருத்தி உள்ளீடுகள்
- திருவிவிலியம்
- இணைப்பு 1.2.1ம் 1.2.2
- மாக்கர் பேனை
- டிமைன் கடதாசி

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படிமுறை 1.2.1
- இணைப்பு 1.2.1இல் இருக்கும் தரவுகளை வாசிக்க
- சமூகத்தில் எம்மால் இழைக்கப்படுகின்ற தவறுகளையிட்டு திறந்த மனதுடன் கலந்துரையாடுவர்
- இதன் மூலம் தனக்கும், சமூகததிற்கும் ஏற்படும் தீமையின் விளைவை வெளிப்படுத்துங்கள்
- மனம் வருந்தலினூடாக இறை மன்னிப்பை பெற்றுக்கொள்வதின் முக்கியத்துவத்தை பற்றி கலந்துரையாட இடமளியுங்கள்
- பின்வருவனவற்றை உறுதிப்படுத்தும் வகையில் கலந்துரையாடலை ஏற்படுத்துங்கள்

- இறைவனின் உடன்படிக்கையும், நேர்மையும் எங்களை நல்வழிப்படுத்தும் ஒளியாகும் என்பது (எசாயா 51 : 48)
- தாவீதின் செயற்பாடு மிகவும் சுயநலம் கொண்டதாகும் என்பது
- அதற்கு இறைவன் விரும்பவில்லை என்பது (1 சமுவேல் 11)
- தாவீது தவறை உணர்ந்து மனம் வருந்தினார் என்பது (1சாமுவேல்12)
- நேர்மையான வழியில் இட்டுச் செல்வதன் மூலம் இறை படைப்பை வளர்ச்சியுறச் செய்ய முடியும் என்பது
- மனம் வருந்துவது இறைத் தொடர்பை புதுப்பித்துக் கொள்வதற்கு ஏதுவாகிறது என்பது

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 1.2.2

- வகுப்பு மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரிக்குக.
- இணைப்பு 1.2.2 பெற்றுக் கொடுங்கள்
- டிமைன் கடதாசி, மாக்கர் பேனை பெற்றுக் கொடுங்கள்
- மாணவர்களுக்கு வேலைகளை ஒப்படைத்து குழு ஆய்வினை மேற்கொள்ளச் செய்க
- எல்லா குழுக்களும் ஆய்வினை முன்வைக்க ஆயத்தம் செய்யுங்கள்

(40 நிமிடங்கள்)

படிமுறை 1.2.3

- சிறிய குழுக்களின் வெளிப்படுத்தலை எல்லா குழுக்களுக்கும் முன்வைக்க செய்யுங்கள்
- விமர்சனங்களுக்காக முதலில் முன்வந்த குழுவிற்கு சந்தர்ப்பத்தை வழங்குக
- ஏனைய குழுக்களின் முன்னேற்ற கரமான கருத்துக்களை பெற்றுக் கொள்க
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபடுங்கள்

- வெறுமனே நேரத்தை கழிப்பது பாவத்தில் வீழ்வதற்கு இலகுவான வழியாகும் என்பது
- இறைவனின் படைப்பில் அழகிய நிர்மாணங்களை நேர்மையற்ற வழியில் பயன்படுத்திக்கொள்ள கூடாது என்பது
- இறை வசனத்தை உச்சரிப்பது பாவத்திலிருந்து விடுபடுவதற்கு ஏதுவாகும் என்பது
- பிழையை சுட்டிக்காட்டுவது தலைவனின் (மேய்ப்பனின்) கடமையாகும் என்பது
- உண்மையான மன்னிப்பை கேட்பது, உடைந்துபோன இறை தொடர்பை மீண்டும் கட்டியெழுப்பும் வழியாகும் என்பது
- இறைவனின் தீர்ப்புக்கும் தண்டனைக்கும் தலைசாய்த்தல் வேண்டும்என்பது
- சரியான வழியில் செல்வதன் மூலம் இறை பணியின் வளர்ச்சிக்குட்பட முடியும் என்பது

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு மதிப்பீட்டு செயலொழுங்கு

1. சோதனைகளை வென்று வாழ்வதற்கு செய்யவேண்டியவையைப் பற்றி விபரிப்பர்

வாழ்வில் மாற்றத்தை கொண்டு
வாழ்வாள் ஒளிக்கு சான்ற பகிர்வுடன்

செயற்பாட்டுப்படிவம்

இணைப்பு 2.4.2

1. சகேயுவும், சமாரியபெண்ணும் ஒளியைக் கண்ணால் கண்டது பற்றி திருவிவிலிய நூலில் தேடிப்பிடித்து எழுதுக.

2. சகேயு இயேசுகிறிஸ்துவுக்காக சான்று பகிரக்கூடிய சந்தர்ப்பங்களை வரிசைப்படுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 2.0 : இயேசுவின் ஒளியின்படி வாழ்வர்

தேர்ச்சி மட்டம் 2.5 : ஒளியான இயேசு மூலம் பெற்றுக்கொண்ட ஒளிக்கு சான்று பகர்வர்

செயற்பாடு 2.5 : ஒளியான இயேசு மூலம் பெற்றுக்கொண்ட ஒளிக்கு சான்று பகர்வோம்

நேரம் : 80 நிமிடங்கள்

தரவிருத்தி உள்ளீடுகள்
- இணைப்பு 2.5.1ம், 2.5.2
- அன்னை திரேசாவையும், மார்ட்டின் லூதர் கிங் அவர்களையும் காட்டும் உருவப்படங்கள் / சித்திரம்

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படிமுறை 2.5.1
- இணைப்பு 2.5.1 இல் தரவுகளை மாணவர்கள் விளங்கிக்கொள்ளும் பொருட்டு ஒருமுறை அல்லது இருமுறை வாசியுங்கள்
- குறித்த உருவப்படங்களை / சித்திரங்களை காட்சிப்படுத்தி அதுபற்றிய கருத்துக்களை கூறுவதற்கு இடமளியுங்கள்
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தி கலந்துரையாடலில் ஈடுபட வழிகாட்டுங்கள்

> - இறைபணியில் ஈடுபட எந்த வேளையிலும் எமக்கு அழைப்பு வரலாம் என்பது
> - அன்னை திரேசா மிக இளம் வயதிலேயே இறைபணிக்கு அழைப்பு பெற்றவராவார் என்பது
> - மார்ட்டின் லூதர் கிங் நிற பேதத்தினால் பாதிப்படைந்த மக்களுக்காக சேவையில் ஈடுபட்டார் என்பது
> - சமாதானம் உண்டாக செய்யும் சேவை இறைவனுக்காக

(20 நிமிடங்கள்)

படிமுறை 2.5.2
- வகுப்பில் மாணவர்களை சிறு குழுக்களாகப் பிரிக்குக.
- இணைப்பு 2.5.2 கடதாசி, மாக்கர் பேனை குழுக்களுக்கு வழங்குக.
- குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரப் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- அறிக்கை சமர்ப்பிக்க குழுக்களை வழிப்படுத்துங்கள்
- எல்லாக் குழுக்களையும் அறிக்கையை முன்வைக்க ஆயத்தப்படுத்துங்கள்

(20 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 2.5.3

- சிறு குழுக்களின் வெளிப்பாட்டை குழுவுக்கு சமர்ப்பிக்க இடமளியுங்கள்
- கருத்துக்களை முன்வைக்க குழுவரிசையின்படி சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களிடமிருந்து ஆரோக்கியமான கருத்துக்களை பெற்றுக்கொள்க.
- பின்வருவனவற்றை வலியுறுத்தி ஆரோக்கியமான கலந்துரையாடலொன்றில் ஈடுபடுக.

- அன்னை திரேசா இறைபணிக்காக எல்லாவற்றையும் அர்ப்பணித்தார் என்பது
- அன்னை திரேசா துன்பத்தினால் வாடியவர்களுக்காகவும் வறுமையால் கைவிடப்பட்டவர்களுக்காகவும் பெறுமதிமிக்க ஒளி நிறைந்த செயற்பாட்டில் ஈடுபட்டார் என்பது
- மார்ட்டின் லூதர் கிங் உரிமைகளை இழந்தவர்களின் பொருட்டு பயன்தரக்கூடிய செயற்பாட்டில் ஈடுபட்டார் என்பது
- மார்ட்டின் லூதர் கிங் அவர்களின் ஒளியின் சேவை அகிம்சை வாதத்துக்கும், சமாதானத்துக்கும் அடிப்படையாக அமைந்தது என்பது
- அன்னை திரேசா, மார்ட்டின் லூதர் கிங் ஆகிய இருவரும் ஒளிக்கு சான்று பகர்ந்தனர் என்பது
- எமது சமுதாயத்தில் ஒளிக்கு சான்று பகர்வதற்காக கடவுள் எம்மை அழைப்பார் என்பது

(40 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. அன்னை திரேசாவின் ஒளியின் பணி பற்றிய அறிக்கையொன்றை தயாரிப்பர்
2. மார்ட்டின் லூதர் கிங் அகிம்சைவாதியாக செய்த சேவையைப் பற்றி கதையொன்று கூறுவர்
3. சமுதாயத்தில் ஒளிபெறச் செய்யவேண்டிய இருளான இடத்தினை தேடிப்பார்ப்பர்
4. இருளடைந்துள்ள சமுதாயத்தை ஒளிபெறச்செய்யும் வேலையில் ஈடுபடுவர்

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

1. குழுத்தேடி ஆய்வு பத்திரங்கள் பற்றி எல்லா குழுக்களின் கவனத்தை ஈர்க்கவும்
2. குழுக்களுக்கிடையில் கலந்துரையாடி திட்டமிட்டு செயற்படுவதற்கு அறிவுரை வழங்குக
3. குழுக்களின் கருத்துக்களை அறிக்கைப்படுத்தி அவைகளை முழு குழுக்களுக்கு முன்வைக்க இடமளியுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் கோவை

இணைப்பு 2.5.1

**அன்னை திரேசா**

1910ல் மெசிடோனியாவில் அல்ஜீரிய குடும்பத்தில் எக்னஸ் என்ற பெண் குழந்தை பிறந்தது. 12 வயதாக இருக்கும்பொழுது இறைபணிக்கான அழைப்பு இறைவனால் அனுப்பப்பட்டுள்ளதை உணர்ந்தாள். மிஷனரி சேவைக்கே தான் அழைக்கப்படுவதாக அவள் தெரிந்து கொண்டாள். இதுவரை சுகபோக வாழ்க்கையில் இருந்த இவர் தமது 18ம் வயதில் தமது பெற்றோரையும் வீட்டையும் விட்டு வெளியேறி 'லொரேடோ' கன்னியர் மடத்தில் சேர்ந்தார். கன்னியர் மடத்தின் சேவை அதிகமாக இந்தியாவிலேயே பரவியிருந்தது. டப்ளின் நகரில் கொடுக்கப்பட்ட குறுகிய பயிற்சியின் மூலம் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். 1931ல் கன்னியாஸ்திரியாக ஒளிக்கு சேவை செய்ய ஏற்றுக்கொள்ளப்பட்டார். 1931 - 1948 வரை இவர் கல்கட்டாவில் உயர் பாடசாலையொன்றில் கல்வி கற்பித்து வந்தார். இருந்தும் அவரின் கவனம் எல்லாம் மடத்துக்கு வெளியே துன்பம் துயரப்படுகின்றவர்களின் பக்கம் இருந்தது. இவர்களை பற்றிய கவலை அவருடைய மனதில் பதிந்தது. 1948ல் கன்னியர் மடத்தைவிட்டு வெளியேறி வறுமையில் வாடிய மூலை முடுக்கில் வாழ்ந்துகொண்டிருந்த மக்களுக்கு உதவ முன்வந்தார். மூலை முடுக்கிலிருந்த சிறார்களுக்கு கல்வி அறிவைப் புகட்ட சிறிய அளவிலான பாடசாலைகளை ஏற்படுத்தினார். இவ்வாறு சிலகாலம் செல்கையில் ஊர் மக்களில் பலர் இவருடன் சேர்ந்து இந்த சமூக சேவை தொண்டு அடிப்படையில் செய்ய முன்வந்தனர். எதிர்பாராத வகையில் இவரின் சேவைக்கு பண உதவியும், சேவை உதவியும் கிடைத்தது. 1950 ஒப்டோபர் 7வது தினம் தங்களின் சேவையாக "கருணை சகோதரிகள்" என்ற கன்னியாஸ்திரியர்களின் திட்டத்தினை ஆரம்பிக்க அவருக்கு அனுமதி கிடைத்தது. இவ்வாறு ஒளியின் பணியை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல அவருக்கு முடிந்தது.

மேலும் நோயில் வாடியவர்களுக்கு உதவி செய்வதற்கும், அநாதையான குழந்தைகளுக்கும் வெள்ளத்தால், வறட்சியால் பாதிக்கப்பட்டவர்கள் மூலம் அநாதையாக்கப்பட்டவர்களுக்கு தனது தொண்டர் சேவையின் மூலம் அவர்களின் நல்வாழ்வுக்கு உதவிசெய்தார். தனது தொண்டர் சேவையின் மூலம் அளப்பரிய சேவையை இந்திய மண்ணிற்கு வழங்கினார். இதன் மூலம் இவருடைய சேவை உலக நாடுகளுக்கு பிரசித்தம் பெற்றது. 1979 ஐ.நா.சபையின் மூலம் இவரின் சேவையைப் பாராட்டி நோபல் பரிசு வழங்கப்பட்டது.

**மார்ட்டின் லூதர் கிங்**

மைக்கல் லூதர் கிங் என்ற பெயரில் பிறந்த இவர் பின்பு தனது பெயரை மார்ட்டின் லூதர் கிங் என மாற்றிக் கொண்டார்.

கலாநிதிப்பட்டம் வரை பெற்ற இவர் சிறந்த கல்வியைப் பெற்றவர். அதேபோன்று நிறபேதம் வெறிகொண்ட அமெரிக்க ஆட்சிக்கு எதிராகக் குரல் எழுப்பினார். கறுப்பு இனத்தவர்களின் உரிமைகளை உதாசினம் செய்ததைத் தவிர்ப்பதற்காக இயக்கங்கள் தோன்றின. மார்ட்டின் லூதர் கிங் மகாத்மா காந்தியின் அகிம்சை வழிகளில் தமது மக்களுக்கும் விடுதலையைப்பெற்றுக் கொடுக்க முயற்சித்தார். இலட்சக்கணக்கான மைல்கள் நடந்தே சென்று தமது மக்களுக்கு நடந்துள்ள அநீதிகளைப்பற்றி பல இடங்களில் பேசினார். அந்த மக்களுக்கு நீதி, நேர்மையான ஆட்சி கிடைக்க வேண்டுமென்று போராடினார். கறுப்பு இனத்தவர்களின் உரிமைகளைப்பற்றி ஐந்து நூல்கள் எழுதியுள்ளார். பேர்மிங்காம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டபோது நீக்ரோக்களின் புரட்சியின் கொள்கைகள் அடங்கிய பிரகடனம் ஒன்றை எழுதினார். அமைதியான சமாதான ஊர்வலங்களை ஏற்படுத்தி வழிநடத்தினார். இதன் மூலம் ஆட்சியாளர்களின் இம்சை வழியினை எதிர்த்து "எனது கனவு" என்ற பிரசித்தி பெற்ற உரையின் மூலம் மக்களின் உணர்வை வெளிக்கொணர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமுறை சிறையில் அடைக்கப்பட்டும் இவர் நான்கு முறை தாக்கப்பட்டும் தனது ஒளியின் சேவையை நிறைவேற்றியது பெறுமதிக்குரியதாகும். அன்று அமெரிக்காவில் ஒடுக்கப்பட்டு அடக்கப்பட்டு இருந்த மக்களுக்கு இவரினால் நிறைவேற்றப்பட்ட ஒளியின் பணியும், தலைமைத்துவமும் பற்றி உலகமுழுவதும் பேசப்படுகின்றதல்லவா? இவருக்கு கிடைத்த நோபல் பரிசுக்காக கிடைத்த பணத்தைக்கூட மனித உரிமைகள் சாசனத்தின் செலவிற்காக கொடுத்துள்ளார். இறுதியில் கொலைஞன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். ஆனால் நீதி, நேர்மைக்காகவும் தான் துணிவுடன் பயப்படாது தன்னை அர்ப்பணித்த கிறிஸ்தவனாகவும் செய்யப்பட்ட சேவையும் என்றும் மரணிக்காது உயிருடன் இருக்கிறது.

**செயற்பாட்டுப்படிவம்**

**இணைப்பு 2.5.2**

1. இந்திய சமுதாயத்திற்கு அன்னை திரேசா அம்மையாரினால் செய்யப்பட்ட ஒளியைப்பற்றி சஞ்சிகை ஒன்றுக்கு கடிதம் ஒன்று எழுதுக.

2. "இன்றைய சமூகத்தில் மார்ட்டின் லூதர் கிங்" என்ற தலைப்பில் கீழ் போஸ்டர் ஒன்றை எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | : | இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிந்து வாழ்வர் |
| தேர்ச்சி மட்டம் 3.1 | : | தூயாவியின் வலுவூட்டல் மூலம் உறுதியடைந்து இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவர் |
| செயற்பாடு 3.1 | : | தூயாவியின் வலுவூட்டல் மூலம் உறுதியடைந்து இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் |
| நேரம் | : | 120 நிமிடங்கள் |

தரவிருத்தி உள்ளீடுகள்

- இணைப்பு 3.1.1 தகவல் கோவையை மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் வாசியுங்கள்
- குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல்
- திருவிவிலியம்
- எழுது கடதாசி
- நிறப்பேனா

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படிமுறை 3.1.1

- இணைப்பு 3.1.1 தகவல் கோவையை மாணவர்கள் நன்கு விளங்கிய வண்ணம் வாசியுங்கள்
- இறையாட்சியைப் பற்றி கலந்துரையாடுங்கள்
- தூயாவியைப் பற்றிய கருத்துப் பகிர்வுக்கு இடமளியுங்கள்
- தூயாவியானவர் எங்களை வழிநடத்துகின்றார் என்பதை விளக்குங்கள்
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் கலந்துரையாடலில் ஈடுபட வழிகாட்டுங்கள்

- தூயாவியின் பலத்துடன் இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணித்து செயல்பட வேண்டும் என்பது
- தூயாவியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது (திருத்தூதர் பணி 2 பெந்தெகொஸ்தே தினம்)
- நாங்களும் தூயாவியின் வரத்தைப் பெற்று இறையரசிற்கு சேவை செய்வோம் என்பது
- தூயாவியின் அருள்பெற்று வாழ்ந்தால் வாழ்வு பொருளடையும் என்பது (உரோமையர் 8 : 9 - 10)

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 3.1.2

- மாணவர்களை சிறு குழுக்களாக்குங்கள்
- குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திர பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்
- தேவையான எழுது கடதாசி, நிறப்பேனா என்பவற்றை மாணவர்களுக்கு வழங்குங்கள்
- குழுச்செயற்பாட்டை அவதானித்து உறுதி செய்யுங்கள்
- அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கு குழுக்களை ஆயத்தப்படுத்துங்கள்

(40 நிமிடங்கள்)

படிமுறை 3.1.3

- தமது வெளிப்பாட்டை சமர்ப்பிக்க குழுக்களை வழிப்படுத்துங்கள்
- வேறு பொருத்தமான கருத்துக்களை வெளிக்கொணர அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்
- ஆக்கபூர்வமான விமர்சனங்களை முன்வைக்க ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- குழுக்களின் சிந்தனை பகிர்வினை தொகுத்து பின்வரும் கருத்துக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்

- இறையரசைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்பது
- இறையரசைக் கட்டியெழுப்ப தூயாவியின் வல்லமை தேவை என்பது
- பெந்தெகொஸ்தே நாளில் தூயாவியானவர் இறங்கினார் என்பது
- தூயாவியைப் பெற்றால் எங்களுடைய வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படும் என்பது
- தூயாவியைப் பெற்று அர்ப்பணிப்புடன் இறையரசைக் கட்டியெழுப்புவோம் என்பது

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. பெந்தகொஸ்து நாளில் நடந்த சம்பவங்களை விளக்கி அன்றைய தினம் பேதுருவின் பிரசங்கத்தின் சுருக்கத்தை கலந்துரையாடல் மூலமாக வெளிப்படுத்துவர்

2. "நம்பிக்கை கொண்டோர் ஒரு மனப்பட்டு வாழ்ந்த வாழ்க்கையானது இன்றைய திருச்சபைகளுக்கு" என்ற தலைப்பின்கீழ் பத்திரிகைக்கு கட்டுரை ஒன்று எழுதுவர்

3. மாணவர்கள் வாழுகின்ற சூழலில் ஒரு குடும்பத்திற்கு சேவை செய்த நிகழ்ச்சிகளை நாடகமாக நடிப்பர்

**தகவல் கோவை** **இணைப்பு 3.1.1**

இறைவன் மனுக்குலத்தோர் மீது செலுத்தும் ஆதிக்கமே இறையாட்சியாகும். இயேசுகிறிஸ்து இறையரசை நிலைநிறுத்தவே இவ் உலகிற்கு வந்தார். அவர் தம் பணியின்போது இறையரசைப் பற்றிய விளக்கத்தை உவமைகளாக மக்களுக்கு கூறினார். உதாரணமாக (கடுகுவிதை)

நாங்களும் இயேசுகிறிஸ்துவின் வழிகாட்டலைப் பின்பற்றி கிறிஸ்தவ விழுமியங்களினூடாக இறையரசின் வளர்ச்சிக்காக செயல்படுவோம்.

பெந்தெகொஸ்தே தினத்தன்று ஏறத்தாள சீடர்களுடன் 120 பேர்கள் ஒரு மனப்பட்டு செபித்துக் கொண்டிருந்தனர். அவ்வேளையில் தான் தூயாவியானவர் ஒவ்வொருவர் மேலும் இறங்கினார். (திருத்தூதர் பணி 2) பெந்தெகொஸ்து என்றால் 50வது என பொருள்படும். பாஸ்கா திருவிழாவின் பின் 50வது நாள் கொண்டாடப்படும். அங்கு கூடியிருந்த மக்களின்மேல் தூயாவியானவர் இறங்கியதும் அவர்கள் புதுப்பொழிவு பெற்று திடம் கொண்டனர்.

நாங்களும் தூயாவியானவரின் பலத்தைப்பெற்று இறையாட்சிக்குரிய பிள்ளைகளாய் அர்ப்பணிப்புடன் சேவை செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | : | இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணித்து வாழ்வர் |
| தேர்ச்சி மட்டம் 3.2 | : | தூயாவியின் வலுவூட்டல் மூலம் அடைந்த துணிவுடன் இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவர் |
| செயற்பாடு 3.2 | : | தூயாவியின் வலுவூட்டல் மூலம் அடைந்த துணிவுடன் இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் |
| நேரம் | | 120 நிமிடங்கள் |

தரவிருத்தி உள்ளீடுகள்
- இணைப்பு 3.2.1 தகவல் கோவையை மாணவர்களுக்கு நன்கு விளங்கிக்கொள்ளுமாறு வாசியுங்கள்
- திருவிவிலியம்
- டிமைன் கடதாசி
- நிறப்பேனா

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படிமுறை 3.2.1
- இணைப்பு 3.2.1 தகவல் கோவையை மாணவர்கள் நன்கு விளங்கும் வண்ணம் வாசியுங்கள்
- தூயாவியின் பெலத்தினால் நான் துணிவுடன் செயற்பட்டு நல்வாழ்வு வாழ்கிறேன் என்று கூறுவதற்கு மாணவர்களுக்கு இடம் கொடுங்கள்
- தூயாவி எங்களுடனே எவ்வாறு செயற்படுகிறார் என்பது பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்

- நாம் ஒருமனப்பட்டு செபிப்பதன் மூலம் தூயாவி எங்கள் மேல் இறங்குவார் என்பது
- இயேசுவை நான் அறியேன் என பயத்தினால் மறுதலித்த பேதுரு தூயாவியைப் பெற்று துணிவுடன் அவருக்கு சாட்சியாக செயற்பட்டார் என்பது
- தூயாவியின் துணிவை இறையாட்சியின் வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டும் என்பது
- புதுவாழ்வுக்கு தூயாவி முதன்மையானவர் என்பது

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 3.2.2

- மாணவர்களை சிறு குழுக்களாக பிரியுங்கள்
- குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திர பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்
- தேவையான பொருட்களை மாணவர்களுக்கு வழங்குங்கள்
- அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கு குழுக்களை ஆயத்துப்படுத்துங்கள்

(40 நிமிடங்கள்)

படிமுறை 3.2.3

- வெளிப்பாட்டை சமர்ப்பிக்க குழுக்களை வழிநடத்துங்கள்
- பொருத்தமான கருத்துக்களை வெளிக்கொண்டு வருவதற்கு குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்
- வேறு பொருத்தமான கருத்துக்களை வெளிக்கொண்டு வருவதற்கும் குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்
- குழுக்களின் கருத்துக்களோடு உங்களின் கருத்துக்களையும் கூறுங்கள்

- தூயாவியானவர் பேதுரு மேல் இறங்குமுன் அவரின் நிலைப்பாடு என்ன என்பது
- தூயாவியின் வரத்தைப் பெற்ற பின் இயேசுகிறிஸ்துவைப் பற்றி சீடர்கள் சாட்சி பகர்ந்தனர் என்பது
- தூயாவியின் பலத்துடன் சமுதாயத்திற்கு சேவை செய்வோம் என்பது
- புதுவாழ்வுக்கு தூயாவியானவர் முக்கியம் என்பது (எபேசியர் 4, யோவான் 16 : 5)

(40 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. தூயாவியைப் பெறும் முன் பேதுருவின் நிலைப்பாட்டையும், தூயாவியைப் பெற்ற பின பேதுருவின் நிலைப்பாட்டையும் ஆராய்வர்.

2. தூயாவியின் வல்லமையைப் பெற்ற நாங்களும் இறையரசின் வளர்ச்சிக்காக சமுதாயத்தில் சேவையாஈற்றுவோம் என்பதை விளக்குவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தகவல் கோவை**

பஸ்கா விருந்தின் பின்பு இயேசுகிறிஸ்துவை
பிடித்துக் கொண்டு போன அன்று இரவிலே
பேதுரு இயேசுவை அறியேன் என
மறுதலித்தார் ஆனாலும் தூய ஆவியைப் பெற்றபின்
இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றி
சாட்சி கூறினார்

நம்பிக்கை கொண்டோரின் வாழ்க்கை முறையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. ஒரே மனதுடன் செபித்தல், உடமைகளை பொதுவாக அனுபவித்தல், ஒன்றாக ஐக்கிய உணவு உண்டனர்.

எபேசியர் 4ம் அதிகாரத்தில் கிறிஸ்துவின் உடல் ஒற்றுமைக்கு இடமளிக்கிறது. தூயாவி எங்களுக்குள்ளே வாசம் பண்ணுகிறதற்கு நாங்கள் செய்யும் தீய செயல்களுக்கு இறைவனிடம் மன்னிப்பு கேட்கவேண்டும். மீண்டும் மீண்டும் தீயச் செயல்கள் செய்வதற்கு இடமளிக்கக் கூடாது. இவ்வாறு வாழ்ந்தால் தான் இறையரசின் பிள்ளைகளாகுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | : | இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணித்து வாழ்வர் |
| தேர்ச்சி மட்டம் 3.3 | : | தூயாவியின் கொடைகளை இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் பாவித்து செயற்படுவர் |
| செயற்பாடு 3.3 | : | தூயாவியின் கொடைகளை இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணித்து பாவித்து செயற்படுவோம் |
| நேரம் | : | 120 நிமிடங்கள் |

தரவிருத்தி உள்ளீடுகள்

- இணைப்பு 3.3.1
- திருவிவிலியம்
- எழுது கடதாசி, டிமைன் கடதாசி
- நிறப்பேனா

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படிமுறை 3.3.1

- இணைப்பு 3.3.1 இலுள்ள தகவல் கோவையை மாணவர்கள் நன்கு விளங்கும் வண்ணம் வாசியுங்கள்
- மாணவர்கள் தங்களுக்குள்ளே இருக்கும் தூயாவியின் கொடைகளைக் கூறுவதற்கு இடமளியுங்கள்
- தமது கொடைகளை இனம் காணமுடியாத மாணவர்களுக்கு திறமைகளை இனங்கண்டு கொள்வதற்கு வழிகாட்டுங்கள்
- தூயாவியைப் பெற்றுக் கொள்வதைப்பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்
- தூயாவியினால் கிடைக்கப்பெற்ற கொடைகளை இறையாட்சியின் வளர்ச்சிக்காக பயன்படுத்த உற்சாகமளியுங்கள்

- தினமும் திருவிவிலியத்தை வாசித்து தியானிக்க வேண்டும் என்பது
- தூய ஆவியினால் நாம் பெற்றுள்ள கொடைகளை இனங்கண்டு கொள்ளல் வேண்டும் என்பது
- இயேசுகிறிஸ்து நம்மீது வைத்துள்ள தன்னலமற்ற அன்பை ருசிக்கவேண்டும் என்பது
- அன்பினால் நாம் ஒருவரையொருவர் தாங்கிக் கொள்ள வேண்டும் என்பது
- கொடைகளில் அன்பே பெரியது என்பது

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 3.3.2**

- மாணவர்களை சிறுகுழுக்களாக்குங்கள்
- குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திர பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்
- தேவையான எழுது கடதாசி, நிறப்பேனா என்பவற்றை வழங்குங்கள்
- குழுச்செயற்பாட்டை அவதானித்து உறுதி செய்யுங்கள்
- அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கு குழுக்களை ஆயத்தப்படுத்துங்கள்

(40 நிமிடங்கள்)

**படிமுறை 3.3.3**

- வெளிப்பாடுகளை சமர்ப்பிக்க குழுக்களை வழிப்படுத்துங்கள்
- வேறு பொருத்தமான கருத்துக்களை வெளிக்கொணர அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்
- ஆக்கபூர்வமான விமர்சனங்களை முன்வைக்க ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்

- திருவிவலியத்தை தினமும் வாசிப்பதுடன் செபத்திலும் ஈடுபடவேண்டும் என்பது
- எந்த வேளையிலும் மற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு தயாராயிருத்தல் என்பது
- 1 கொரிந்தியர் 13 இல் பவுலடியாரால் கூறப்பட்ட அன்பின் மகத்துவத்தை மற்றோர் அறிந்துகொள்ள வேண்டும் என்பது
- உலகில் அகிம்சை வழியின் மூலம் அனைத்தையும் வெற்றி கொள்ளலாம் என்பது
- இயேசுகிறிஸ்துவின் தன்னலமற்ற அன்பு அளப்பரியது என்பதை உணர்ந்து கொள்வர் என்பது

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கணிப்பீட்டு மதிப்பிட்டு நியதிகள்

i. அன்பின் செயற்பாட்டினால் இறையாட்சியின் வளர்ச்சிக்கு உழைத்தவர்களுள் ஒருவரைப்பற்றி சிறிய ஆய்வு ஒன்றை நடத்துவர்

2. தூயாவியினால் பெற்றுக்கொண்ட கொடைகளை இறையரசின் பணிக்குப் பயன்படுத்த முதல் இடம் கொடுப்பேன் என தீர்மானித்து செபம் ஒன்றை ஏறெடுப்பர்

3. பாடசாலையிலிருந்து வீடு நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது வீதியைக் கடக்க முயன்று கொண்டிருக்கும் முதியோருக்கு நீர் என்ன செய்வீர் என்பதை சித்திரமாக வரைவர்

### தகவல் கோவை — இணைப்பு 3.3.1

நாங்கள் தினமும் வேதம் வாசித்து, தியானித்து, செபிப்பதன் மூலமாக இறை சித்தத்தை அறிந்து கொள்ள முடியும். அதன்படி செயற்படவும் வேண்டும். கொடைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

உலகில் மக்கள் பலரும் பலவிதத்தில் அன்பினை வெளிக்காட்டுகிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்து எங்கள் மீது காட்டிய அன்பு வேறுபட்டதாகும். "அகாபே" என்றால் நிலைமாறாத அன்பாகும். அன்பின் மகிமையைப் பற்றி 1 கொரிந்தியர் 13 இல் அறிந்து கொள்ளலாம். ஆதலால் தூயாவியானவரின் மூலம் பெற்றுக்கொண்ட அன்பின் கொடையின் மூலம் அனைத்து மக்களையும் இறையரசிற்குரியவர்களாக்குவோம். (1 கொரிந்தியர் 14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | : | இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணித்து வாழ்வர் |
| தேர்ச்சி மட்டம் 3.4 | : | எசாயாவின் தூய்மையான சமுதாயம் அடிப்படையில் இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்பணிப்புடன் செயற்படுவர் |
| செயற்பாடு 3.4 | : | எசாயாவின் தூய்மையான சமுதாயம் அடிப்படையில் இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் |
| நேரம் | : | 120 நிமிடங்கள் |

தரவிருத்தி உள்ளீடுகள்
- இணைப்பு 3.4.1 இலுள்ள தகவல் கோவை
- திருவிவிலியம்
- எழுது கடதாசி
- நிறப்பேனா

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படிமுறை 3.4.1
- இணைப்பு 3.4.1 இலுள்ள தகவல் கோவையை மாணவர்கள் நன்கு விளங்குமாறு வாசியுங்கள்
- இறைவாக்கினர் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்
- இறைவாக்கினர்கள் இறையாட்சியின் வளர்ச்சிக்காக மக்களுக்கு கூறிய அறிவுரைகள் பற்றி மாணவர்கள் கூறுவதற்கு இடமளியுங்கள்
- இறைவாக்கினரின் வாழ்க்கை முறைகளை விளக்குங்கள்
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் கலந்துரையாடலில் ஈடுபட வழிகாட்டுங்கள்

> - இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் மாத்திரமே இறைவாக்கினராக முடியம் என்பது
> - தூய்மையான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப எச்சரிக்கைகள் தேவை என்பது
> - பல எதிர்ப்புக்களின் மத்தியிலும் நீதி, நேர்மைக்காக குரல்கொடுக்க வேண்டும் என்பது

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 3.4.2

- மாணவர்களை சிறுகுழுக்களாக்குங்கள்
- குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திர பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்
- தேவையான எழுது கடதாசி, நிறப்பேனா என்பவற்றை மாணவர்களுக்கு வழங்குங்கள்
- குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதி செய்யுங்கள்
- அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்காக குழுக்களை ஆயத்தப்படுத்துங்கள்

(40 நிமிடங்கள்)

படிமுறை 3.4.3

- வெளிப்பாடுகளை சமர்ப்பிக்க குழுக்களை வழிப்படுத்துங்கள்
- வேறு பொருத்தமான கருத்துக்களை வெளிக்கொணர அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்
- ஆக்கபூர்வமான விமர்சனங்களை முன்வைக்க ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- குழுக்களின் சிந்தனைப் பகிர்வினை தொகுத்து பின்வரும் கருத்துக்களை இணைத்து கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்

- இறையாட்சியின் விழுமியங்களை தரிசனங்களின் மூலமாக அறிந்து வெளிப்படுத்துபவர்களே இறைவாக்கினர் என்பது
- தூய்மையான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப எச்சரிக்கைகளும், வாக்குறுதிகளும் தேவை என்பது
  எசாயா 1 : 17 - 19
  எசாயா 32 : 1 - 8
- இறையாட்சியின் விருத்திக்காகத் தூய சமுதாயத்தைக் கட்டியெழுப்ப குரல் கொடுக்கும்போது இன்னல்கள் நிகழக்கூடும் என்பது
- தூயாவியைப் பெற்று திடமுடன் இறையரசின் வளர்ச்சிக்காக அர்பணிப்புடன் சேவை செய்ய வேண்டும் என்பது

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. எசாயா இறைவாக்கினராகத் தெரிந்தெடுக்கப்பட்ட விதத்தினை கலந்துரையாடலின் மூலம் விளக்குவர்.

2. தூய்மையான சமுதாயத்தை உருவாக்குவதற்கு எசாயா இறைவாக்கினரால் கூறப்பட்டவைகளைச் சுருக்கமாக எழுதுவர்.

3. தற்போதுள்ள சமுதாயத்தில் உங்களால் இனங்கண்டு கொள்ள முடிந்த அநீதிகளையும் கண்டறிந்து அதற்கான தீர்வுகளையும் அட்டவணைப்படுத்துவர்.

## தகவல் கோவை இணைப்பு 3.4.1

எசாயா இறைவாக்கினர் கி.மு 8ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். எசாயா என்பதன் கருத்து "யாவே விடுவிக்கிறார்" என்பதாகும்.

பலஸ்தீனா நாடு வட அரசு, தென் அரசு என இரண்டாகப் பிரிய நேரிட்டது. வட அரசில் 10 நாடுகளும், தென் அரசில் 2 நாடுகளும் உள்ளடக்கப்பட்டன. இக்காலத்தில் தான் இறைவாக்கினர்களும் தேவைப்பட்டார்கள். எசாயா யூதா நாட்டு மக்களை நல்வழிப்படுத்தலில் ஈடுபட்டார். தீமையான செயல்களில் ஈடுபடாதீர்கள், நீதியை நிலைநாட்டுங்கள், ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள், கைம்பெண்களுக்காக வழக்காடுங்கள் என்று குரல் கொடுத்தார்.

நீதியான அரசராகிய இயேசுகிறிஸ்துவின் பிறப்பைப் பற்றியும் எதிர்வு கூறியுள்ளார். இன்றைய சமுதாயத்தில் நாங்கள் நீதி, நேர்மையுடன் கூடிய புதிய சமுதாயத்தை உருவாக்குவதோடு இறையரசின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயல்படுவோம்.

## செயற்பாட்டுப்படிவம் இணைப்பு 3.4.2

1. இறைவாக்கினர்களின் பணிகள் யாதென எழுதிக் காட்டுவர்

2. இறைவாக்கினர் எசாயாவை இறைவன் எவ்வாறு தூய்மையாக்கினார் என்பதை வெளிப்படுத்திக் காட்டுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | : | இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிந்து வாழ்வர் |
| தேர்ச்சி மட்டம் 3.5 | : | எரேமியாவின் சமுதாய வலுவூட்டல் அடிப்படையில் இறையாட்சியின் வளர்ச்சிக்கு செயற்படுவர் |
| செயற்பாடு 3.5 | : | எரேமியாவின் சமுதாய வலுவூட்டல் அடிப்படையில் இறையாட்சியின் வளர்ச்சிக்கு செயற்படுவோம் |
| நேரம் | : | 80 நிமிடங்கள் |

தரவிருத்தி உள்ளீடுகள்

- திருவிவிலியம்
- இணைப்பு 3.5.1ம், 3.5.2
- டிமைன் கடதாசி, மாக்கர் பேனை

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படிமுறை 3.5.1

- இணைப்பு 3.5.1 மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் வாசியுங்கள்
- இறைவாக்கினர் எரேமியாவின் காலத்தில் சமுதாயத்தின் நிலைபற்றி திருவிவிலியத்தினூடாக தேடிக்கண்டு பிடிப்பதற்கு இடமளியுங்கள்
- கடவுள் எரேமியா மூலமாக மக்களுக்கு அனுப்பிய செய்தி பற்றி தேடியறிந்து கொள்வதற்கு இடமளியுங்கள்
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தி கலந்துரையாடல் ஒன்றை ஏற்படுத்துங்கள்

> - இன்று இஸ்ராயேல் மக்கள் குயவன் கையிலுள்ள களிமண்ணைப் போலிருந்தார்கள் என்பது (எரேமியா 18)
> - கடவுளுக்கு அந்த களிமண்ணைப் பறித்து, உடைத்து, அழித்துவிட முடியும் என்பது
> - பாவத்திலிருந்து மனம் திரும்பினால் அதைக் கட்டியெழுப்பி விருத்தி செய்ய முடியும் என்பது
> - பாவத்திலிருந்து மனம் திரும்பாவிட்டால் குயவனின் மண்பாண்டத்தை உடைத்தது போல இந்த நகரத்தையும் மக்களையும் உடைத்து போடுவேன் என்பது

(20 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 3.5.2**

- வகுப்பில் மாணவர்களை சிறுகுழுக்களாக்குங்கள்
- இணைப்பு 3.5.2 டிமைன் கடதாசி, மாக்கர் பேனை என்பவற்றை வழங்குங்கள்
- குழுத்தேடியாய்வு பத்திரங்களை வழங்கி ஆய்வில் ஈடுபடுத்துங்கள்
- குழுக்களை மேற்பார்வை செய்வதுடன், தேவையான உதவிகளை பெற்றுக்கொடுங்கள்
- எல்லாக் குழுக்களுக்கும் கருத்துக்களை முன்வைக்க ஆயத்தப்படுத்துங்கள்

(20 நிமிடங்கள்)

**படிமுறை 3.5.3**

- சிறிய குழுக்களின் வெளிப்பாடுகளை பொது குழுக்கு முன்வையுங்கள்
- விமர்சனம் செய்வதற்கு முதலில் முன்வரும் குழுவுக்கு முதல் சந்தர்ப்பம் வழங்குங்கள்
- ஏனைய குழுக்களின் ஆரோக்கியமான கருத்துக்களைப் பெற்றுக் கொள்க
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தி கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட வழிகாட்டுங்கள்

- எருசலேமிலிருந்து பபிலோனியாவுக்கு சிறைக்கைதிகளாகக்கொண்டு செல்லப்பட்ட மக்களுக்கு எரேமியா அனுப்பிய மடல் என்பது (எரேமியா 29)
- இம் மக்கள் பபிலோனியாவில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி அந்த நிருபத்திலே குறிக்கப்பட்டிருப்பது என்பது
- பொய்யான இறைவாக்கினரிடமிருந்து
- பபிலோனியர்கள் திரும்பி தமது தாய்நாட்டுக்கு கொண்டு வரப்பட்டு கடவுளின் வாக்குறுதியை நிறைவேற்றுவர் என்பது
- இறுதியில் கடவுள் அவர்களுடன் புதிய ஏற்பாடொன்றை ஏற்படுத்திக் கொள்வர் என்பது (எரேமியா 31 : 31 - 34)

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. கடவுளின் மக்களாகிய நாம் இறைசித்தத்தின்படி வாழ வேண்டும் என தீர்மானிப்பர்

2. சமுதாயத்தில் காணப்படும் அநீதிகளுக்கும் நேர்மையற்ற செயல்களுக்கும் எதிராக குரல் கொடுத்து சமுதாய எழுச்சியை மேம்படுத்துவர் என்பதை ஏற்றுக்கொள்வர்

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

1. குழுத்தேடியாய்வு பத்திரத்தை பற்றி எல்லா குழுக்களின் கவனத்திற்கும் கொண்டு வருக.

2. குழுக்களுடன் கலந்துரையாடிக் கொண்டு திட்டத்தினை வகுத்து அதனை செயற்படுத்துவதற்கு எல்லோரையும் ஈடுபடுத்துங்கள்

3. குழுக்களின் கருத்துக்களை அறிக்கைப்படுத்தி பொது குழுவுக்கு முன்வைக்க ஆயத்தம் செய்யுங்கள்.

## தகவல் கோவை

**இணைப்பு 3.5.1**

இன்று சமுதாயத்தில் கடவுளின் மக்கள் கடவுளின் வாக்குக்கிணங்க புதிய வாழ்வைக் கட்டியெழுப்பாது, லௌகீக உலகிலே ஏற்பட்டிருக்கும் மாற்றத்தின் அலையில் சிக்கி அதன்படி வாழ எத்தனிக்கின்றனர். சமுதாயத்தில் நற்பண்புகள் நலிவடைந்து போட்டி மனப்பான்மை நிறைந்த அரசான யுகத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறது. பொய் நிறைந்த அநீதியற்ற, ஒற்றுமையற்ற, சுயநலம் கொண்ட பழிவாங்குதல், பொறாமை கொள்ளுதல் போன்ற தீய பண்புகள் இன்று சமுதாயத்தில் மலிந்து கிடப்பதை காண்கிறோம். இறைவன் இவ்வாறான செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிப்பதில்லை. இறைவனின் பிள்ளைகளாகிய நாம் இவ்வாறான தீய செயற்பாடுகள் சமூகத்தில் தலைதூக்காத வண்ணம் தடுக்க முன்வர வேண்டும். அதனூடாக நல்ல பண்புகளை சமுதாயத்தில் வளர்த்தெடுப்பதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அன்று எரேமியா சமுதாய வலுவூட்டலுக்கூடாக சக்தியை கொடுத்ததைப்போன்று நாம் இன்று சமுதாயத்தின் வலுவூட்டலுக்காக இறைவனின் சக்தியை பெற்றுக்கொள்வோம்.

## செயற்பாட்டுப்படிவம்

**இணைப்பு 3.5.2**

சுவரொட்டி ஒன்றை தயாரிக்குக

| எரேமியாவின் காலத்தில் சமுதாய நிலைப்பாடு | இன்றைய சமுதாய நிலைப்பாடு | இவற்றை போக்குவதற்கு ஆலோசனைகள் |
|---|---|---|
| | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | : | இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணித்து வாழ்வர் |
| தேர்ச்சி மட்டம் 3.6 | : | ஆமோசின் 'நீதியான சமுதாயம்' அடிப்படையில் இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவர் |
| செயற்பாடு 3.6 | : | ஆமோசின் 'நீதியான சமுதாயம்' அடிப்படையில் இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் |
| நேரம் | | 80 நிமிடங்கள் |

தரவிருத்தி உள்ளிடுகள்
- திருவிவிலியம்
- இணைப்பு 3.6.1ம், 3.6.2
- டிமைன் கடதாசி, மாக்கர் பேனை
- பத்திரிகை செய்தி (நாட்டில் நடக்கும் அநீதிகள்)

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படிமுறை 3.6.1
- இணைப்பு 3.6.1 மாணவர்களுக்கு விளங்கும்படியாக வாசிக்குக
- பத்திரிகை செய்தியை வகுப்பில் வாசித்துக் காட்டி மாணவர்களுடன் அதுபற்றி கலந்துரையாடுங்கள்

- நேர்மையின் ஊடாக நீதியை நிலைநாட்ட அநேக நாடுகளுக்கு இன்று தேவை ஏற்பட்டுள்ளது என்பது .
- நேர்மையின் ஊடாக நீதியை இறையரசின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படுதல் வேண்டும் என்பது
- மனித சமுதாயத்தில் நிலவுகின்ற நேர்மையற்ற, அநீதிகளை விட்டுத்தள்ளி நேர்மையான நீதியினை ஏற்படுத்த வேண்டும் என்பது
- இறையாட்சியில் நேர்மையானது ஊற்றெடுத்து ஓடும் நீர்போல நேர்மையற்ற ஆட்சியில் அது வெள்ளமென புரண்டோடும் என்பது
- சமுதாயத்தில் நேர்மையின்றி வாழ்கின்றவர்களின் கடவுள் வழிபாடு இறைவனுக்கு ஒவ்வாததாகும் என்பது
- நேர்மையான நீதியைக்கொண்ட சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாம் செயற்படவேண்டும் என்பது

(20 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 3.6.2**

- வகுப்பில் மாணவர்களை குழுக்களாக பிரிக்குக.
- இணைப்பு 3.6.2 டிமைன் கடதாசியும், மாக்கர் பேனையும் குழுக்களுக்கு பங்கிடுக
- தேடியாய்வு பத்திரங்களை வழங்கி ஆய்வில் ஈடுபடுத்துங்கள்
- ஆசிரியர் குழுக்களை மேற்பார்வை செய்வதுடன் தேவையான உதவிகளை செய்து கொடுங்கள்
- எல்லாக் குழுக்களும் ஆய்வினை முன்வைக்க ஆயத்தப்படுத்துங்கள்

(20 நிமிடங்கள்)

**படிமுறை 3.6.3**

- பூரணமான நேர்மையை ஏற்படுத்துவதற்கு என்ன செய்யவேண்டும் என வினவி அறிக்கையொன்றை தயார் செய்ய குழுக்களை வழிநடத்துங்கள்
- சிறிய குழுக்களின் வெளிப்பாட்டை பொது குழுவுக்கு முன்வைக்க செய்யுங்கள்
- குறித்த குழுவின் அங்கத்தவர்கள் அனைவரும் கருத்துக்களை தெரிவிக்க இடமளியுங்கள்
- ஏனைய குழுக்களின் ஏற்றுக்கொள்ளக்கூடிய அபிப்பிராயங்களை பெற்றுக்கொள்ளுங்கள்
- எல்லா கருத்துக்களையும் ஒன்றுசேர்த்து பின்வரும் அபிப்பிராயங்களை வலியுறுத்தி கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபடுங்கள்

- கடவுள் நேர்மையற்ற அநீதியான செயல்களை கண்டிக்கும் பொதுவான கடவுளாக இருக்கிறா் என்பது
- இறைவாக்குக்கு அமைய, நேர்மையை மதித்து வாழ்வோமானால் சமுதாயத்தில் உண்மையான நேர்மையை ஏற்படுத்த முடியும் என்பது
- நேர்மை உண்டாவது எல்லோரும் நல்லெண்ணத்துடன் வாழ்ந்தால் மட்டுமே என்பது
- ஆமோஸ் அவர்கள் சமுதாய அநீதிகளை இனங்கண்டு, நேர்மையை நிலைநாட்ட உயிரை துச்சமாக மதித்து செயற்பட்டார் என்பது
- அநீதிகளை செய்துகொண்டு பலிகளை ஒப்புக்கொடுக்கும் செயலானது இறைவனுக்கு செய்யும் நிந்தித்தலாகும்.

  எனவே அவர்களை கடவுள் தீமையிலிருந்து நன்மையில் ஈடுபட செய்து சமுதாயத்தில் நீதியை நிலைநிறுத்துவதற்காக ஆமோஸ் செயற்பட்டார் என்பது (ஆமோஸ் 5 : 7 - 27)

(40 நிமிடங்கள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. சமுதாய அநீதிகளைப் பற்றி ஆமோஸ் கூறியிருப்பதை வாசித்து மனதை திடப்படுத்திக் கொள்வர்

2. அன்று சமுதாயத்தில் நிலவிய அநீதிகளைப்பற்றி தெரிந்துகொண்டு இன்று சமுதாயத்தில் அவ்வாறான அநீதிகளை தேடியறிந்து விபரிப்பர்

3. அதற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி திட்டமிடுவர்

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

1. குழுத்தேடியாய்வு பத்திரங்களை பற்றி குழுக்களுக்கு விளக்கமளியுங்கள்

2. குழுக்களுடன் கலந்துரையாடி திட்டமிட்ட செயற்பாட்டொன்றில் ஈடுபடுத்துங்கள்

3. குழுக்களின் அபிப்பிராயங்களை அறிக்கைப்படுத்த அதனை பொது குழுவுக்கு முன்வைப்பதற்கு ஆயத்தப்படுத்துங்கள்

## தகவல் கோவை

**இணைப்பு 3.6.1**

அநீதிகளால் நிரம்பிய இன்றைய சமுதாயத்திற்கு மிகவும் அவசியமாக உள்ளது நீதியாகும். நேர்மையின் மூலம் இறைவனின் நீதியை உண்டாக்கும்பொழுது அது இறைவனின் வழிகாட்டல் மூலமாகும் என்பதாகும். நேர்மையுடன் வாழ்ந்த ஆமோஸ் இறைவாக்கினராக இல்லாவிடினும், சமுதாய அநீதிகளைக்கண்டு சிங்கம் ஒன்று சீறிப்பாய்ந்தபோது பயப்படாதவர்கள் யாருளர்? அதுபோன்று இறைவன் பேசும்போது இறைவன் குரைக்காமல் இருப்பது எங்ஙனம் என்று கூறி சமுதாய அநீதிகளை கண்டித்தார்.

இதுபோன்று இறைவன் பொதுவான சாந்தமான கடவுள் என்பதால் தீமையினின்றும் விடுபட்டு நல்வழிக்கு திரும்பும்படி உரைத்தார்.

நேர்மை என்பது இறையரசின் பெறுமதி மிக்கதொன்றாகும். நல்ல சமுதாயத்தைக் கட்டியெழுப்பவேண்டுமானால் அங்கு நீதியும், நேர்மையும் நிலவுவதால் மட்டுமேயாகும். இதன்படி நல்ல ஒரு சமுதாயத்தை உருவாக்க இன்றே நாம் செயற்படுவோம்.

## செயற்பாட்டுப்படிவம்

**இணைப்பு 3.6.2**

போஸ்டர் ஒன்று தயாரிக்குக

| ஆமோஸின் காலத்தில் நடந்த இன்றைய சமுதாயத்தில் நடக்கின்ற அநீதிகள் | சமுதாயத்தில் நீதியை நிலைநாட்ட எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எவை? |
|---|---|
| | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 3.0 : இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணித்து வாழ்வர்

தேர்ச்சி மட்டம் 3.7 : மீக்காவின் 'சமாதான நோக்கு' அடிப்படையில் இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்பணிப்புடன் செயற்படுவர்

செயற்பாடு 3.7 : மீக்காவின் 'சமாதான நோக்கு' அடிப்படையில் இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்

நேரம் : 80 நிமிடங்கள்

தரவிருத்தி உள்ளீடுகள்
- திருவிவிலியம்
- இணைப்பு 3.7.1ம், 3.7.2ம்
- டிமைன் கடதாசியும், மாக்கர் பேனையும் வழங்குக
- பத்திரிகை செய்திகள் (யுத்தம் சம்பந்தாக)
- படங்கள்

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படிமுறை 3.7.1
- இணைப்பு 3.7.1 மாணவர்களுக்கு விளங்கக் கூடியவாறு வாசிக்குக.
- சமாதானத்தை சலோமை விளக்கம் கொடுங்கள்
- யுத்தத்தை பற்றியதும் செழிப்பான விவசாயம் பற்றியதுமான படங்களை காட்டி அவர்களின் அபிப்பிராயங்களை தெரிவிக்க இடமளியுங்கள்
- சமாதானம் உண்டானபோது ஏற்படும் நன்மைகளை மாணவர் அறிந்துகொள்ள வழிகாட்டுங்கள்
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தி கலந்துரையாடலொன்றை நடத்துங்கள்

- நேர்மையான சமாதானம் உலகின் பல நாடுகளுக்கு இன்று அவசியப்படுகிறது என்பது
- நேர்மையான சமாதானம் இறையாட்சியின் பண்புகளுடன் கூடியதானதொன்றாக இருக்கவேண்டும் என்பது
- மனித சமுதாயத்தில் நிலவுகின்ற பிளவுகளையும் தாண்டி எல்லோருக்கும் பொதுவான சமாதானம் கிடைக்க வேண்டும் என்பது
- இச் சமாதானத்தின் மூலம் இனங்களுக்கிடையில் குரோதம் மூலம் வாள் எடுத்தலோ, போர் உண்டாவதையோ தவிர்த்துக்கொள்ளலாம் என்பது
- யுத்தத்திற்காக (ஆயுதங்கள்) செலவழிக்கப்பட்ட பணத்தை விவசாயம் செய்வதற்கான ஆயுதங்களைப் பெற செலவிட்டால் நாட்டின் சௌபாக்கியத்தை உருவாக்கிக் கொள்ள முடியும் என்பது
- அவ்வாறு நேர்மையுடன் கூடிய சமாதானத்துக்காக நாங்களும் பங்குதாரர்கள் ஆக வேண்டும் என்பது

(20 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 3.7.3

- எல்லோருக்கும் நேர்மையான சமாதானம் கிடைக்கச் செய்ய நாம் என்ன செய்யவேண்டும் என்பதை கேட்டறிந்து அறிக்கையொன்றை முன்வைக்க குழுக்களை வழிநடத்துங்கள்
- சிறிய குழுக்களின் வெளிப்படுத்தலை பொது குழுவுக்கு முன்வைக்க செய்யுங்கள்
- குறித்த குழுவின் ஏனைய அங்கத்தவர்களுக்கும் கருத்து தெரிவியுங்கள்
- ஏனைய குழுக்களின் ஏற்றுக்கொள்ளகூடிய கருத்துக்களை பெற்றுக்கொள்க
- எல்லா அபிப்பிராயங்களையும் சேர்த்துக்கொண்டு பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தி கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபடுங்கள்

- அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்.
  ஏனெனில் அவர்கள் கடவுளின் பிள்ளைகளாக அமைதியை ஏற்படுத்துவதற்காக நாம் அமைதியின் ஆயுதங்களாக செயற்படவேண்டும் என்பது
- அமைதி நிறைந்த உலகை ஏற்படுத்தவேண்டுமானால் இவ் உலகிலுள்ள அனைவரும் கடவுளின் பிள்ளைகளாவோம் என்ற உணர்வுடன் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பது
- நேர்மையான அமைதியொன்றை உருவாக்கிக்கொள்ள வேண்டுமானால் ஒவ்வொருவருக்குரிய இனம், மதம், பண்பாடுகளுக்குள் கலாச்சாரங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பது
- தன்னலமற்றவன் எந்த ஒரு பேதமுமின்றி மற்றவர்களின் உரிமைகளைப்பற்றி மதிப்பளித்தல் வேண்டுமென்பது

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. இறைவாக்கினர் மீகா 4 : 1 - 4 வாசித்து அமைதியான காட்சியை மனதில் பதித்துக் கொள்வர்

2. இன்று எமது நாட்டில் அமைதி இல்லாமல் போவதற்கான காரணங்களை விளக்கிக் கூறுவர்

3. நாட்டின் அமைதியை உருவாக்கிக் கொள்ள எமக்கு அமைதி ஆயுதமாக வேண்டிய வழிமுறைகளை தேடுவர்

4. எந்த ஒரு மனிதனுக்கும் மன்னிப்பையும், அன்பையும் வெளிப்படுத்துவதற்கு முன்வருவர்

**தகவல் கோவை** **இணைப்பு 3.7.1**

1. குழுத்தேடி ஆய்வுக்கான பத்திரங்களைப் பற்றி எல்லா குழுக்களினதும் கவனத்தை ஈர்க்க வழிசெய்யுங்கள்

2. குழுக்களுடன் கலந்துரையாடி, திட்டமிட்ட செயற்பாட்டில் ஈடுபடச் செய்யுங்கள்

3. குழுக்களின் கருத்துக்களை அறிக்கைப்படுத்தி அவைகளை பொதுக் குழுவுக்கு முன்வைக்க ஆயத்தப்படுத்துங்கள்

**இணைப்பு 3.7.2**

உலகிற்கு சமாதானம் அவசியம். அது எல்லாருக்கும் பொதுவான சமாதானமாக அமைய வேண்டும். அப்படியல்லாவிடில் உலகில் பல நாடுகளில் ஒற்றுமை அற்றுப்போகும். இதனால் பெரிய அழிவுகள் ஏற்படும். இன்று உலகில் யுத்தத்தினால் பாரிய செலவுகள் ஏற்படுகின்றன. அந்த செலவுகளை அபிவிருத்திக்காக செலவிட்டால் இந்த உலகம் சௌபாக்கியமாக இருக்கும். இறைவாக்கினர் மீகா கூறியபடி "தங்களின் வாள்களை கலப்பை கொழுக்களாகவும், தங்கள் ஈட்டிகளைக் கருக்கரி வாள்களாகவும் அடித்துக் கொள்வார்கள்.

எந்த ஒரு துன்பமும் இருக்காது யுத்தம் வராது. யுத்தப்பயிற்சி பெறுபவர்கள் இல்லாமல் போவார்கள். அதேபோல் தான் தாம் பயிர் திராட்சை கொடிக்கும் அத்திக்காய் மரத்திற்கும் கீழும் அமர்ந்திருப்பார்கள். இறைவாக்கினர் மீக்கா முன்வைத்துள்ள அமைதியின் தரிசனமானது அந்தக் காலத்திற்கு மட்டுமல்ல இக்காலத்திற்கும் பொருத்தமானதாகும். அமைதி உண்டாவதன் மூலம் உலகுக்கு கிடைக்கவிருக்கின்ற நன்மை மிகவும் பெரியது. இந்த உலகம் அமைதி நிறைந்த உலகமாக காண்பது இறைவனின் சித்தமாகும். இயேசுகிறிஸ்து அமைதி குமாரனாக உலகில் தோன்றியதன் மூலம் அது வெளிப்படையாகும். ஆகவே கடவுளின் பிள்ளைகளாக நாம் இந்த உலகில் அமைதியை ஏற்படுத்துவதற்காக எமது வாழ்வை அர்ப்பணிக்க முன்வரவேண்டும் என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டுப்படிவம் இணைப்பு 3.7.2

1. எல்லாருக்கும் நீதி கிடைப்பதன் மூலம் அமைதி நிறைந்த உலகத்திற்காக செபம் ஒன்று எழுதுக.

2. உலகில் நீதியை அடிப்படையாகக்கொண்ட அமைதி ஒன்றை உருவாக்குவதற்காக எம்மால் செய்யக்கூடிய வழிமுறைகளை முன்வையுங்கள்.

3. உலகில் அமைதியின் மூலம் எதிர்பாக்கக்கூடிய நன்மைகளைப் பற்றி பட்டியல் ஒன்று ஆயத்தம் செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 3.0** | : | இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணித்து வாழ்வர் |
| **தேர்ச்சி மட்டம் 3.8** | : | ஒசேயாவின் அன்பு மைய மன்னிப்பு அடிப்படையில் இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவர் |
| **செயற்பாடு 3.8** | : | ஒசேயாவின் அன்பு மைய மன்னிப்பு அடிப்படையில் இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். |
| **நேரம்** | : | 80 நிமிடங்கள் |

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- திருவிவிலியம்
- இணைப்ப 3.8.1, 3.8.2
- டிமைன் கடதாசியும் மாக்கர் பேனையும்
- இயேசுகிறிஸ்துவின் சிலுவையில் தொங்கும் படம்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 3.8.1**

- இணைப்பு 3.8.1 மாணவர்கள் விளங்கக்கூடிய வகையில் வாசியுங்கள்
- அன்பைப்பற்றி வியாக்கியானம் செய்க - இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்படத்தைக் காட்டுக
- உண்மையாக அன்பை செலுத்துவதானால் மன்னிப்பதற்கு நாம் எப்போதும் பின்னிற்பதில்லை என்பதை மாணவர்கள் விளங்கிக்கொள்ள செய்யுங்கள்
- திருவிவிலியத்தில் அன்பைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும் கற்றுக் கொள்ளக்கூடியவற்றை மாணவர்களின் கவனத்தைத் திருப்புங்கள்

- மனிதர்களடங்கலாக ஏனைய உயிர்களுக்கும் அன்பு முக்கியமானதாகும் என்பது
- பூரணமான மன்னிப்பை வழங்குவதற்கு அன்பினால் மட்டுமே முடியும் என்பது
- எல்லைக்குட்படாத மன்னிப்பை வழங்க வேண்டும் என்பது
- ஒசேயா நித்தமும் தவறுசெய்த தன் மனைவிக்கு மன்னிப்பு வழங்கியது அவன் அவள் மீது வைத்திருந்த உண்மையான அன்பினாலாகும் என்பது
- அதேபோல் இஸ்ரயேல் மக்கள் பலமுறை வேறு தெய்வங்களுக்குப்பின் சென்று உயிர்க்கடவுளை மறந்திருந்தாலும் கடவுள் அவர்களுக்கு மன்னிப்பை வழங்கியது அவர்கள் மேலிருந்த அன்பினாலாகும் என்பது
- அன்பு செலுத்துதல், மன்னித்தல் என்பது கடவுளின் பிள்ளைகளுக்கேயான பண்புகளாக இருந்தது என்பது
- எமது எதிரிகள் கூட அன்பு செலுத்துவதால் நாம் அவர்களுக்கு மன்னிப்பை அளித்தல் வேண்டும் என்பது

(20 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 3.8.2**

- வகுப்பில் மாணவர்களை குழுக்காளாகப் பிரியுங்கள்
- இணைப்பு 3.81ம், 3.8.2ம் டிமைன் கடதாசி, மாக்கர் பேனையும் குழுக்களுக்கு வழங்குங்கள்
- குழுத்தேடியாய்வு பத்திரங்களையும் வழங்கி சிறு குழுக்களை ஆய்வில் ஈடுபடுத்துங்கள்
- ஆசிரியர் குழுக்களை மேற்பார்வை செய்து தேவையான உதவிகளை பெற்றுக்கொடுங்கள்
- எல்லா குழுக்களும் கருத்துக்களை முன்வைக்க ஆயத்தம் செய்யுங்கள்

(20 நிமிடங்கள்)

**படிமுறை 3.8.3**

- அன்பின் மூலம் மன்னிப்பளிக்கப்படும் சந்தர்ப்பங்களை தேடியறிவதற்கு குழுக்களுக்கு வழிகாட்டுங்கள்
- சிறு குழுக்களின் வெளிப்படுத்தலை எல்லா குழுக்களும் முன்வைக்கச் செய்யுங்கள்
- குறித்த குழுவின் ஏனைய அங்கத்தவர்களுக்கும் கருத்துக்களை வெளியிட இடமளியுங்கள்
- ஏனைய குழுக்களின் பொருத்தமான கருத்துக்களை பெற்றுக் கொள்க
- எல்லா கருத்துக்களையும் ஒன்று சேர்த்துக்கொண்டு பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தி கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபடுங்கள்

- கடவுள் பாவிகளான எங்களுக்கு மன்னிப்ளிப்பதற்கு தமது ஒரே குமாரனை உலகுக்கு அனுப்பியது அன்பு காட்டியமையாகும் என்பது
- தற்கால சமுதாயத்தில் தன்னலமற்ற அன்பு உருவாக வேண்டும் என்பது
- இதேபோன்று எல்லையற்ற மன்னிப்பை வழங்குவதற்கு மனிதன் முன்வரவேண்டும் என்பது
- கடவுளின் செபத்தில் கூறப்பட்டுள்ளவாறு எமக்கு மன்னிப்பு கிடைப்பது நாம் மற்றவர்களுக்கு மன்னிப்பு அளித்தால் என்பது
- அன்பின் வழியாக மன்னிப்பை வழங்குவதற்கு முன்வருதல் இறையரசின் பெறுமதிக்கு அமைய வாழ்க்கையை நடத்துவதனால் மட்டுமே என்பது

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. ஒசேயா 11 : 1 குறிப்பிடப்பட்டுள்ள கடவுள் இஸ்ரயேல் மக்களுக்கு எந்தளவு அன்பை செலுத்தியுள்ளார் என்றால் கடவுள் இஸ்ரயேல் மக்களை திருப்பி அழைத்தமை நினைவிற்கு வருகிறதா?

2. ஒசேயா தனது விட்டுப்போன மனைவிக்கு அன்போடு கூடிய மன்னிப்பை கொடுத்தது ஏன்? ஏனெனில் கடவுள் தன்னைவிட்டு பிரிந்து சென்ற இஸ்ரயேல் மக்களுக்கு அன்பு செலுத்தி மன்னிப்பை வழங்கிய கதையை விளக்குவர்

3. தவறு செய்தவர்களுக்கு அன்போடு கூடிய மன்னிப்பை கொடுப்பதற்கு தீர்மானித்து அதற்காக பொறுமையாக செயற்படுவதற்கு முன்வருவர்.

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

1. குழுத்தேடியாய்வு பத்திரங்களைப் பற்றி மாணவர்களின் கவனத்தை ஈர்க்குக.

2. குழுக்களிடையே கலந்துரையாடி திட்டமிட்ட செயற்பாட்டில் ஈடுபடுக.

3. குழுக்களின் அபிப்பிராயங்களை அறிக்கைப்படுத்தி அவற்றை எல்லா குழுக்களுக்கும் முன்வைக்க ஆயத்தம் செய்க.

## தகவல் கோவை இணைப்பு 3.8.1

இறைவன் எங்களுக்கு நிபந்தனையற்ற அன்பை செலுத்தினார். நாம் மற்றவர்களுக்கு அன்பு செலுத்துவது கடவுளின் எதிர்பார்ப்பாகும். மற்றவர்களைப் பற்றி எம்மிடம் அன்பு இருந்தால் அவர்கள் செய்கின்ற எந்த தவறுக்கும் நாங்கள் மன்னிப்பளிக்க முடியும். உதாரணமாக: (பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் எந்த தவறு செய்தாலும் அவர்கள் மீது இருக்கின்ற அன்பினால் மன்னிப்பை வழங்குவதற்கு எதிர்பார்த்திருப்போம்)

இன்று உலகத்தில் எண்ணற்ற பிரச்சினைகள் ஏற்படுவதற்கு காரணமாக இருப்பது சமுதாயத்தில் அன்பு இல்லாதவர்கள் இருப்பதாகும். தவறு செய்தவர்களுக்கு மன்னிப்பை வழங்காமல் இருப்பதே ஆகும். விரலை நீட்டி மற்றவர்களின் குறைகளை சுட்டிக்காட்டும்பொழுது எங்களைப் பற்றி மூன்று விரல்களும் தவறை சுட்டிக்காட்டுவதாக அமைகிறது. அகவே மற்றவர்களின் தவறுகளை நினைக்கும்பொழுது என்னிடமும் தவறுகள் இருக்கின்றன நாங்களும் பாவிகளாவோம் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அப்போது எங்களுக்கு மற்றவர்களால் செய்யப்படுகின்ற தவறுகளுக்கும், எங்களால் மற்றவர்களுக்கு செய்யப்படுகின்ற தவறுகளுக்கும் அன்பின் மூலமாக மன்னிப்பை வழங்க முடியும். இயேசுகிறிஸ்து எங்களுக்கு அன்பு செலுத்தியது எங்களுடைய பாவத்திற்காகவே சிலுவையில் அறையப்பட்டு மரித்தது நாம் பாவிகளாக இருந்தமையே ஆகும். ஆகவே இறைபிள்ளைகளாக அனைவரும் அன்பினாலான மன்னிப்பை வழங்குவதற்கு நாம் முன்வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 4.0 : திருவிவிலியத்தின் அடிப்படையில் அன்றாட வாழ்வை வாழ்வர்

தேர்ச்சி மட்டம் 4.1 : திருவிவிலியம் எழுதப்பட்ட மூலமொழிகளை அறிந்து திருவிவிலியச் செய்தியின்படி வாழ்வர்

செயற்பாடு 4.1 : திருவிவிலியம் எழுதப்பட்ட மூலமொழிகளை அறிந்து திருவிவிலியச் செய்தியின்படி வாழ்வோம்

நேரம் : 120 நிமிடங்கள்

தரவிருத்தி உள்ளீடுகள்
- இணைப்பு 4.1.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 4.1.2 இலுள்ள குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்
- திருவிவிலியம்
- சுருளேடுகளினதும் களிமண் தட்டுகளினதும் படங்கள்
- எழுது கடதாசி, நிறப்பேனா

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படிமுறை 4.1.1
- இணைப்பு 4.1.1 இலுள்ள தகவல் கோவையை ஓரிரு முறை மாணவர்கள் நன்கு விளங்கும் வண்ணம் வாசியுங்கள்
- திருமறைப் பகுதிகள் எபிரேய, கிரேக்க, அரமேயு மொழிகளில் எழுதப்பட்டுள்ள வெவ்வேறு மொழிகளில் எழுதப்பட்டவற்றின் தொகுப்பும், மொழிபெயர்ப்பும் திருமறை என்பதை விளக்குங்கள்
- சுருளேடுகள், களிமண் தட்டுகளின் படங்களைக் காட்சிப்படுத்தி மாணவரின் கருத்துக்களைப் பகிர இடமளியுங்கள்
- இறைவனைப் பற்றிய அனுபவங்களையும், கருத்துக்களையும் மக்கள் பண்டைய காலத்தில் பகிர்ந்துகொண்ட விதம் பற்றி கலந்துரையாட மாணவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் கலந்துரையாடலில் ஈடுபட வழிகாட்டுங்கள்

> - இறைவெளிப்பாட்டை மனிதன் மனிதமொழிகளில் தான் புரிந்து கொள்ளலாம் என்பது
> - மனிதமொழிகளில் விளக்கப்பட்டுள்ள இறைவெளிப்பாடுகளின் ஒரு ஊடகம் திருவிவிலியம் என்பது
> - மனிதமொழிகளில் எழுதப்பட்டாலும், திருமறை இறை ஏவுதலால் எழுதப்பட்டது என்பது
> - இறைவெளிப்பாடான திருமறைச் செய்தியின்படி வாழவேண்டும் என்பது

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 4.1.2

- மாணவர்களை சிறு குழுக்களாக்குங்கள்
- குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திர பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்
- தேவையான எழுது கடதாசி, நிறப்பேனா என்பவற்றை மாணவருக்கு வழங்குங்கள்
- குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதி செய்யுங்கள்
- அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கு குழுக்களை ஆயத்தம் செய்யுங்கள்

(40 நிமிடங்கள்)

படிமுறை 4.1.3

- அறிக்கை சமர்ப்பிக்க குழுக்களை வழிப்படுத்துங்கள்
- அறிக்கையை பூரணப்படுத்த அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்
- ஆக்கபூர்வமான விமர்சனங்களை முன்வைக்க ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- குழுக்களின் சிந்தனைப் பகிர்வினைத் தொகுத்து, பின்வரும் கருத்துக்களை இணைத்து, ஆரோக்கியமான கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்

- குறிப்பிட்ட காலச்சூழலில் காலத்தின் தேவைக்கு அமைய இறைவனின் வெளிப்பாடுகள், மக்கள் பயன்படுத்திய மொழிகளில் எழுதி பேணப்பட்டது என்பது
- பழைய ஏற்பாட்டின் பெரும்பாலான பகுதிகள் எபிரேய மொழியிலும், சிலபகுதிகள் அரமேயு மொழியிலும் எழுதப்பட்டது என்பது
- புதிய ஏற்பாட்டின் பகுதிகள் கிரேக்க மொழியில் எழுதப்பட்டன என்பது
- முன்னொரு காலச்சூழலில் வேறு மொழிகளில் எழுதப்பட்டாலும், திருவிவிலியம் இன்றும் நமது வாழ்வை வளமாக்கக்கூடியது என்பது

(40 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. திருவிவிலியம் எழுதப்பட்ட மூலமொழிகள் இன்று பயன்பாட்டில் இல்லாவிட்டாலும், அவற்றை கற்று நமது மொழிகளில் தெளிவுபடுத்த வேண்டிய தேவையை விளக்குவர்

2. பயன்பாட்டில் இல்லாத மொழியில் எழுதப்பட்டவற்றை விளங்கிக்கொள்வதற்கு உதவும் துணைக் கருவிகள் எவை என்பதைக் குறிப்பிடுவர்

3. திருவிவிலியம் எழுதப்பட்ட மூலமொழிகளைக் கற்பிக்கும் பணியிலும், அம்மொழியைப் பற்றி ஆய்வுசெய்யும் பணியிலும் திருச்சபை ஈடுபடும்.

4. திருவிவிலியம் ‘தொன்மை வாய்ந்தது’ என்பது பற்றி சிறு கட்டுரை எழுதுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தகவல் கோவை** **இணைப்பு 4.1.1**

பழைய ஏற்பாட்டின் பெரும்பாலான பகுதிகள் எபிரேய மொழியில் எழுதப்பட்டிருந்தன. சாலமோனின் ஞானமும், வேறு சில பகுதிகளும் அரமேயு மொழியில் எழுதப்பட்டிருந்தன. புதிய ஏற்பாட்டு நூல்கள் கிரேக்க மொழியில் எழுதப்பட்டிருந்தன. ஆனாலும் புதிய ஏற்பாட்டில் காணப்படும் அரமேயு சொற்களும், சொற்பதங்களும், அந்நூலாசிரியர்கள் அரமேயு மொழியில் எழுதப்பட்டிருந்த மூலங்களைப் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துகின்றது. இயேசுவும் அரமேயு மொழியைப் பேசினார். இயேசு பயன்படுத்திய சில அரமேயு சொற்கள் இன்றும் நற்செய்தி நூல்களில் காண்பபடுகின்றன. உதாரணமாக: மாற்கு 5 : 41, 7 : 34 (தலிதாகும், எப்பாத்தா) ஆகிய வசனங்களைக் காண்க.

பழைய ஏற்பாடு கி.மு 250 - 100 வரையான காலத்தில் எகிப்தில் வாழ்ந்த கிரேக்க மொழி பேசும் யூதர்களின் பயன்பாட்டுக்காக கிரேக்க மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டது. பின்னர் இம் மொழிபெயர்ப்பு உலகின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்த யூதருக்கும் பயன்பட்டது. கிரேக்க மொழியிலான திருமறையே ஆரம்ப கிறிஸ்தவத்தின் திருமறையாகவும் காணப்பட்டது. புதிய ஏற்பாடு நூலாசிரியர்களும் கூட இக் கிரேக்க மொழியிலான பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள் காட்டப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்** **இணைப்பு 4.1.2**

1. குழுச் செயற்பாட்டுப்படிவம் குறித்து குழுக்கள் ஒவ்வொன்றும் அதிக கவனம் செலுத்துங்கள்

2. குழுவினருடன் நன்கு கலந்துரையாடி, திட்டமிட்டு செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்

3. குழுக்களின் கருத்து வெளிப்பாடுகளை அறிக்கையாக்கி வகுப்பில் சமர்ப்பிக்க தயாராகுங்கள்

4. மூலமொழியில் திருவிவிலியத்தை விளங்கி அதை மக்களுக்கு விளக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அமைப்புகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து, அவ்வமைப்புகளுக்காகவும், அப்பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்காகவும் மேற்கொள்ளக்கூடிய மன்றாடல் ஒன்றை எழுதுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | : | திருவிவிலியத்தின் அடிப்படையில் அன்றாட வாழ்க்கை வாழ்வர் |
| தேர்ச்சி மட்டம் 4.2 | : | திருவிவிலியத்தின் உலகளாவிய தன்மையை ஏற்று அனைத்து இன மக்களுடனும் ஒற்றுமையாக செயலாற்றுவர் |
| செயற்பாடு 4.2 | : | திருவிவிலியத்தின் உலகளாவிய தன்மையை ஏற்று அனைத்து இன மக்களுடனும் ஒற்றுமையாக செயலாற்றுவோம் |
| நேரம் | : | 120 நிமிடங்கள் |

தரவிருத்தி உள்ளிடுகள்
- இணைப்பு 4.2.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 4.2.2 இலுள்ள குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசி, நிறப்பேனா

கற்றல் கற்பித்தல் செயலெழுங்கு

படிமுறை 4.2.1
- இணைப்பு 4.2.1 இலுள்ள தகவல் கோவையை ஓரிருமுறை மாணவர்கள் நன்கு விளங்கும் வண்ணம் வாசியுங்கள்
- ஒவ்வொரு தேசிய மொழிக்கும் திருமுறையை மொழிபெயர்ப்பதற்கான தேவையை விளக்குங்கள்
- திருவிவிலிய மொழிபெயர்ப்பு சார்பாக திருச்சபையின் பொறுப்பு பற்றிய கலந்துரையாடலில் ஈடுபட மாணவருக்கு சந்தர்ப்பமளியுங்கள்
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் கலந்துரையாடலில் ஈடுபட வழிகாட்டுங்கள்

> - எல்லா தேசங்களிலும் இருப்பவர்கள் தம்மொழியில் வாசித்து விளங்கிக் கொள்ளுமாறு திருவிவிலிய மொழிபெயர்ப்புகள் உதவுகின்றன என்பது
> - திருச்சபை தனது நம்பிக்கையைப் பேணுவதற்கும் அதை நடத்துவதற்கும் திருவிவிலிய மொழிபெயர்ப்புகள் உதவுகின்றன என்பது
> - வெவ்வேறு மொழியில் திருமறை வாசிக்கப்பட்டாலும் அதன் உட்கருத்து மாறாது என்பது

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 4.2.2**

- மாணவர்களை சிறு குழுக்களாக்குங்கள்
- குழுத்தேடியாய்வு அறிவித்தல் பத்திரங்களை மாணவருக்கு வழங்குங்கள்
- தேவையான எழுது கடதாசி, நிறப்பேனா என்பவற்றை மாணவர்களுக்கு வழங்குங்கள்
- குழுச்செயற்பாட்டை அவதானித்து உறுதி செய்யுங்கள்
- அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கு குழுக்களை ஆயத்தப்படுத்துங்கள்

(40 நிமிடங்கள்)

**படிமுறை 4.2.3**

- அறிக்கை சமர்ப்பிக்க குழுக்களை வழிப்படுத்துங்கள்
- அறிக்கையைப் பூரணப்படுத்த அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்
- ஆக்கபூர்வமான விமர்சனங்களை முன்வைக்க ஏனைய குழுக்களுக்கு இடமயளியுங்கள்
- குழுக்களின் சிந்தனைப் பகிர்வைத் தொகுத்து, பின்வரும் கருத்துக்களை இணைத்து, ஆரோக்கியமான கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்

---

- மக்களுக்கு இலகுவில் விளங்கும் மொழியில் திருவிவிலியம் இருப்பது நன்மையளிக்கும் என்பது
- உலக மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ள திருவிவிலியம் எல்லா மக்களையும் ஒன்றிணைக்க வல்லது என்பது
- மூலமொழியின் உட்கருத்து மாறாத வண்ணம் திருவிவிலியம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்பது

---

(40 நிமிடங்கள்)

**கணக்கீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. திருவிவிலிய மொழிபெயர்ப்பு அவசியமானதோர் செயற்பாடு என விளங்குவர்.
2. திருவிவிலிய மொழிபெயர்புப் பணி ஆரம்பத்தில் எதிர்நோக்கிய சவால்களையும் எதிர்ப்புக்களையும் இனம் காண்பர்
3. கிரேக்க, இலத்தீன் மொழிக்கு திருவிவிலியத்தை மொழிபெயர்த்தது பற்றிய அறிக்கை ஒன்றைத் தயாரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தகவல் கோவை** **இணைப்பு 4.2.1**

எபிரேயர்கள் (யூதர்கள்) கிரேக்க மொழியின் செல்வாக்குக்கு உட்பட்டபோது அவர்களின் பயன்பாட்டிற்காக திருவிவிலியத்தின் பழைய ஏற்பாடு எபிரய மொழியிலிருந்து கிரேக்க மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது. பின்னர் அரமேயு மொழி பேசும் எபிரேயர்களின் பயன்பாட்டிற்காக பழைய ஏற்பாட்டின் பகுதிகள் அரமேயு மொழிக்கும் மொழிபெயர்க்கப்பட்டது. கி.பி 1ம் நூற்றாண்டில் தைக்கிரீஸ் நதியின் கிழக்குப் பகுதியில் குடியமர்ந்த எபிரேயரின் பயன்பாட்டுக்காக, அப்பிரதேசத்தில் பயன்பாட்டில் இருந்த சீரிய மொழிக்கும் திருவிவிலியம் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது. கி.பி 3ம் நூற்றாண்டளவில் உரோமைப் பேரரசில் கிரேக்க மொழியின் செல்வாக்கு குன்றி இலத்தீன் மொழியின் பாவனை அதிகரித்ததால் திருவிவிலியம் இலத்தீன் மொழியில் காணப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது. பின்னர் 4ம் நூற்றாண்டில் எத்தியோப்பிய அரசனும் குடிகளும் கிறிஸ்தவத்தைத் தழுவியதால் அவர்கள் வாசித்து விளங்கக்கூடிய விதத்தில் எத்தியோப்பிய மொழிக்கும் திருவிவிலியம் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது. இவ்வாறு பல்வேறு தேவைகளை சந்திக்கும் முகமாக திருவிவிலியம் பல்வேறு மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது.

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்** **இணைப்பு 4.2.2**

1. செயற்பாட்டுப்படிவம் குறித்து குழுக்கள் ஒவ்வொன்றும் அதிக கவனம் செலுத்துங்கள்
2. குழுவினருடன் நன்கு கலந்துரையாடி, திட்டமிட்டு செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்
3. குழுவினரின் கருத்து வெளிப்பாடுகளை அறிக்கையாக்கி வகுப்பில் சமர்ப்பிக்க தயாராகுங்கள்

**செயற்பாட்டுப்படிவம்**

1. “திருவிவிலிய மொழிபெயர்ப்பு நடைபெற்றிராவிட்டால் ....” என்ற பெயரில் கருத்துக்களைப் பட்டியல்படுத்துக.
2. திருவிவிலியம் உலக மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்க வல்லது என்பதை சித்திரம் மூலம் அல்லது கவிதை மூலம் வெளிப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 4.0** : திருவிவிலியத்தின் அடிப்படையில் அன்றாட வாழ்க்கை வாழ்வர்

**தேர்ச்சி மட்டம் 4.3** : சுயமொழியில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட திருவிவிலியங்களைப் பயன்படுத்தி அதன் செய்திகளைத் தமதாக்கிக் கொள்வர்

**செயற்பாடு 4.3** : சுயமொழியில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட திருவிவிலியங்களைப் பயன்படுத்தி அதன் செய்திகளைத் தமதாக்கிக் கொள்வோம்

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**
- இணைப்பு 4.3.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 4.3.2 இலுள்ள குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்
- எழுது கடதாசி, நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 4.3.1**
- இணைப்பு 4.3.1 இலுள்ள தகவல் கோவையை ஓரிரு முறைகள் மாணவர்கள் நன்கு விளங்கும் வண்ணம் வாசியுங்கள்
- திருவிவிலியத்தை நமது நாட்டு மொழிகளுக்கு மொழிபெயர்ப்புச்செய்யும் அமைப்புகள் பற்றி விளக்குங்கள்
- சுயமொழியில் திருவிவிலியத்தை வாசிப்பதன் மூலம் மாணவர் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள இடமளியுங்கள்
- இலங்கையின் மொழிகளில் திருவிவிலியம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதன் நன்மைகளைக் கலந்துரையாட மாணவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் கலந்துரையாடலில் ஈடுபட வழிகாட்டுங்கள்

> - சுயமொழியில் எழுதப்பட்ட திருவிவிலியத்தின் மூலம் இறையியல் கருத்துக்களை இலகுவில் பெற்றுக் கொள்ளலாம் என்பது
> - மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட திருவிவிலியமும் மூலமொழியிலுள்ள திருவிவிலியத்தைப் போலவே ஆன்மீக மேன்மைக்கு உதவும் என்பது
> - திருவிவிலியத்தின் மொழிபெயர்ப்புப் பணி தகைமை பெற்றவர்களினால் நியதிகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் அமைய மேற்கொள்ளப்படும் என்பது

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 4.3.2

- மாணவர்களை சிறு குழுக்களாக்குங்கள்
- குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரங்களை மாணவர்களுக்கு வழங்குங்கள்
- தேவையான எழுது கடதாசி, நிறப்பேனா என்பவற்றை மாணவர்களுக்கு வழங்குங்கள்
- குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதி செய்யுங்கள்
- அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கு குழுக்களை ஆயத்தம் செய்யுங்கள்

(40 நிமிடங்கள்)

படிமுறை 4.3.3

- அறிக்கை சமர்ப்பிக்க குழுக்களை வழிப்படுத்துங்கள்
- வேறு பொருத்தமான கருத்துக்களைக் கொண்டுவர அதே குழுவினருக்கு இடமளியுங்கள்
- ஆக்கபூர்வமான விமர்சனங்களை முன்வைக்க ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- குழுக்களில் சிந்தனைப் பகர்வினைத் தொகுத்து, பின்வரும் கருத்துக்களை இணைத்து, ஆரோக்கியமான கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்

- ஒவ்வொரு மொழியும் மனிதருக்கு கொடுக்கப்பட்ட இறைவனின் கொடை என்பது
- ஒவ்வொரு கிறிஸ்தவரும் தத்தமது சொந்த மொழியில் திருவிவிலியத்தை அறிந்துகொள்ளல் பயன்மிக்கது என்பது
- திருவிவிலிய மொழிபெயர்ப்புக்கு விவிலிய சங்கங்கள் பொறுப்பு வகிக்கின்றன என்பது
- இலங்கை மொழிகளுக்கு திருவிவிலியம் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டமை இலங்கைக் கிறிஸ்தவர்கள் அடைந்த பாக்கியம் என்பது

(40 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. கிறிஸ்தவ வாழ்வு வாழ்வதற்கு திருவிவிலியம் வழிகாட்டி என விளக்குவர்.

2. இலங்கை வேதாகமச் சங்கத்தின் பணிகளைத் தேடி அறிந்து சுவரொட்டி ஒன்றினைத் தயாரிப்பர்.

4. தமிழ், சிங்கள மொழி திருவிவிலிய மொழிபெயர்ப்பு வரலாற்றைத் தொகுத்து எழுதுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தகவல் கோவை** **இணைப்பு 4.3.1**

ஆங்கில மொழிக்கு திருவிவிலியத்தின் மொழிபெயர்ப்பு ஆரம்பத்தில் தனிநபர்களினால் மேற்கொள்ளப்பட்டது. அப்போது இலத்தீன் மொழி திருமறை உத்தியோக பூர்வமாக திருச்சபைகளில் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், இலத்தீன் மொழியில் வழிபாடுகள் நடத்தப்பட்டு வந்தாலும் ஆங்கில மொழிபெயர்ப்புக்கு திருச்சபை அதிகாரிகளிடமிருந்து பெரும் வரவேற்பு கிடைக்கவில்லை. மொழிபெயர்ப்புகள் அழிக்கப்பட்டன. மொழிபெயர்ப்பாளர்கள் துன்புறுத்தப்பட்டனர். (உ+ம் வில்லியம் தின்டேல்)

சுயமொழியில் காணப்படும் திருமறையின் அவசியத்தை உணர்ந்த இங்கிலாந்து திருச்சபைகள் பிரித்தானிய வேதாகமச் சங்கத்தின் மூலம் காலப்போக்கில் திருவிவிலிய மொழிபெயர்ப்புப் பணியை மேற்கொண்டது. நாளடைவில் மொழியில் பாண்டித்தியம் பெற்ற தனிநபர்களின் துணைகொண்டு திருச்சபை திருவிவிலியத்தை வெவ்வேறு நாட்டு மொழிகளுக்கு மொழிபெயர்ப்புச் செய்தாலும் தற்போது பல்வேறு நாடுகளில் காணப்படும் வேதாகமச் சங்கத்தின் அனுசரணையுடனேயே திருவிவிலிய மொழிபெயர்ப்புப் பணி நடைபெறுகின்றது. ஐக்கிய வேதாகமச் சங்கம், சர்வதேச வேதாகமச் சங்கம் ஆகிய இரு பிரதான அமைப்புக்கள் தமது கிளை அலுவலகங்கள் மூலம் பல்வேறு நாடுகளிலும் அந்நாட்டு மொழிகளுக்கு திருவிவிலியத்தை மொழிபெயர்ப்புச் செய்வதை தமது பணிகளுள் ஒன்றாகக் கருதிச் செயல்பட்டு வருகின்றன. இப்பணியினால் உலக கிறிஸ்தவர்கள் திருவிவிலியத்தின் செய்தியை இலகுவில் பெற்றுக் கொள்கின்றனர்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்** **இணைப்பு 4.3.2**

1. செயல்பாட்டுப்படிவம் குறித்து குழுக்கள் ஒவ்வொன்றும் அதிக கவனம் செலுத்துங்கள்
2. குழுவினருடன் நன்கு கலந்துரையாடி, திட்டமிட்டு, செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்
3. குழுவினரின் கருத்து வெளிப்பாடுகளை அறிக்கையாக்கி, வகுப்பில் சமர்ப்பிக்கத் தயாராகுங்கள்

**செயற்பாட்டுப்படிவம்**

1. சுயமொழி திருமறையை வாசித்து நமது தேசத்துக்கு அதிகம் பொருத்தமானது என கருதும் பகுதியை அதன் செய்தி வெளிவரும் வண்ணம் நாடகம் ஒன்றை எழுதுக.
2. திருவிவிலியத்தை வாசித்து தமது வாழ்வில் ஏற்பட்ட மாற்றத்தை விளக்குவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | : | திருவிவிலியத்தின் அடிப்படையில் அன்றாட வாழ்க்கை வாழ்வர் |
| தேர்ச்சி மட்டம் 4.4 | : | திருவிவிலியத்தினைப் பாவித்து ஆன்மீக ஊட்டத்தைப் பெறலாம் என அறிந்து சுயமொழி திருவிவிலியங்களை அன்றாட ஆன்மீக தேவைகளை தீர்க்கப் பாவிப்பர் |
| செயற்பாடு 4.4 | : | திருவிவிலியத்தினைப் பாவித்து ஆன்மீக ஊட்டத்தைப் பெறலாம் என அறிந்து சுயமொழி திருவிவிலியங்களை அன்றாட ஆன்மீக தேவைகளை தீர்க்கப் பாவிப்போம் |
| நேரம் | : | 80 நிமிடங்கள் |

தரவிருத்தி உள்ளீடுகள்

- இணைப்பு 4.4.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 4.4.2 இலுள்ள குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசி, நிறப்பேனா

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படிமுறை 4.4.1

- இணைப்பு 4.4.1 இலுள்ள தகவல் கோவையை ஓரிரு முறைகள் மாணவர்கள் நன்கு விளங்கும் வண்ணம் வாசியுங்கள்
- திருவிவிலியத்தை தனக்குரித்தாக்கிக்கொள்வதற்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்ட மேரி ஜோன்ஸ் இன் செயல்பாடுகளை மாணவருடன் பகிர்ந்து கொள்க
- திருவிவிலியம் மூலம் ஆன்மீக வாழ்வை வளமாக்கல் தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபட மாணவர்களுக்கு சந்தர்ப்பமளியுங்கள்
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் கலந்துரையாடலில் ஈடுபட வழிகாட்டுங்கள்

> - இறைவனுடைய வார்த்தை (திருவிவிலியம்) நல்வாழ்வுக்கான சிறந்த வழிகாட்டி (தி பா 119 : 105) என்பது
> - திருவிவிலியத்தை நாம் வாசிப்பது நமது வாழ்வில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக என்பது
> - திருவிவிலியத்தை முறையாக தியானத்தோடு வாசிப்பதால் ஆன்மீக வழிநடத்தலைப் பெறுவோம் என்பது

(10 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 4.4.2

- மாணவர்களை சிறு குழுக்களாக்குங்கள்
- குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திர பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்
- தேவையான எழுது கடதாசி, நிறப்பேனா என்பவற்றை மாணவர்களுக்கு வழங்குங்கள்
- குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிசெய்யுங்கள்
- அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கு குழுக்களை ஆயத்தப்படுத்துங்கள்

(30 நிமிடங்கள்)

படிமுறை 4.4.3

- அறிக்கை சமர்ப்பிக்க குழுக்களை வழிப்படுத்துங்கள்
- வேறு பொருத்தமான கருத்துக்களை வெளிக்கொணர அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்
- ஆக்கபூர்வமான விமர்சனங்களை முன்வைக்க ஏனைய குழுவினருக்கு இடமளியுங்கள்
- குழுக்களின் சிந்தனைப் பகிர்வினைத் தொகுத்து, பின்வரும் கருத்துக்களை இணைத்து ஆரோக்கியமான கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்

> - ஆன்மீக ஊட்டத்தைப் பெறுவதற்கு திருவிவிலியத்தின் துணைகொண்டு, இறை நம்பிக்கை உள்ளவர்களாக நாம் இருக்கவேண்டும் என்பது
> - திருவிவிலியத்தில் இறைவனைப் பற்றி நாம் அறிந்து ஆன்மீக ஊட்டம்பெற வேண்டும் என்பது
> - நாம் எப்படி வாழ வேண்டும் என இறைவன் எதிர்பார்க்கின்றார் என்பதை திருவிவிலியத்தின் மூலம் நாம் அறிந்து ஆன்மீக ஊட்டம் பெறவேண்டும் என்பது

(40 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. திருவிவிலியம் நல்வாழ்வுக்கு வழிகாட்டி அல்லது வாழ்வுக்கு ஒளி என்பதை விளக்குவர்
2. நல்ல சிந்தனைகள், நல்ல செயற்பாடுகள் என்பவற்றை வளர்க்க திருவிவிலியத்திலிருந்து பெறக்கூடிய போதனைகளை நினைவுபடுத்தி எழுதுவர்
3. திருவிவிலியத்தின் போதனைகளை மேலும் அறிந்து வாழ்வதற்கு நாம் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை இனங்காண்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தகவல் கோவை** **இணைப்பு 4.4.1**

திருவிவிலியத்தின் நூல்கள் அனைத்தும் மக்களின் வாழ்வுச் சூழலில் எழுதப்பட்டவையாகும். தமது வாசகர்களுக்கு இறைவன் யார் என்றும், அவர் படைத்து மீட்ட மக்கள் எவ்வாறு வாழவேண்டும் என்று எதிர்பார்க்கின்றார் என்றும், மக்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்றும் காட்டுவதுடன் அவ்வெதிர்ப்பார்ப்புகளை மீறி நடந்த சந்தர்ப்பங்களையும் திருமறை நூல்கள் காட்டுகின்றன.

இவ்வாறு அன்றைய மக்களுக்கு ஏற்ற போதனைகளைக் கொடுத்த திருவிவிலியத்தின் நூல்கள் இன்றும் நாம் சந்திக்கும் சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் பதில் தருகின்றன. இதன் மூலம் இன்றும் திருவிவிலியம் ஆன்மீக வழிகாட்டியாக விளங்குகின்றது.

இவ்வாறாக முழு உலகத்துக்கும் எல்லா காலத்துக்கும் பொருத்தமுடைய ஆன்மீக போதனைகளைத் திருவிவிலியம் கொண்டுள்ளது.

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்** **இணைப்பு 4.4.2**

1. குழுச்செயற்பாட்டுப் படிவம் குறித்து குழுக்கள் ஒவ்வொன்றும் அதிக கவனம் செலுத்துங்கள்
2. குழுவினருடன் நன்கு கலந்துரையாடி திட்டமிட்டு செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்
3. குழுவினரின் கருத்து வெளிப்பாடுகளை அறிக்கையாக்கி வகுப்பில் சமர்ப்பிக்க தயாராகுங்கள்

**செயற்பாட்டுப்படிவம்**

1. தமது வகுப்பில் / பாடசாலையில் மாணவர்கள் மத்தியில் ஏற்படத் தேவையான நல்மாற்றங்கள் சிலவற்றை இனங்கண்டு அம்மாற்றங்களை ஊக்குவிக்கத் தேவையான திருவிவிலியத்தின் பகுதிகள் சிலவற்றையும் இனங்கண்டு பட்டியல்படுத்தவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | : | திருவிவலியத்தின் அடிப்படையில் அன்றாட வாழ்வை வாழ்வர் |
| தேர்ச்சி மட்டம் 4.5 | : | ஒன்றிணைந்த வாழ்வுக்கு திருவிவிலியத்தின் அடிப்படையை அறிந்து, சுயமொழி திருவிவிலியங்களை அன்றாட ஆன்மீக தேவைகளைத் தீர்க்கப் பாவிப்பர் |
| செயற்பாடு 4.5 | : | ஒன்றிணைந்த வாழ்வுக்கு திருவிவலியத்தின் அடிப்படையை அறிந்து, சுயமொழி திருவிவிலியங்களை அன்றாட ஆன்மீக தேவைகளைத் தீர்க்கப் பாவிப்போம் |
| நேரம் | : | 120 நிமிடங்கள் |

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 4.5.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 4.5.2 இலுள்ள குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசி, நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 4.5.1**

- இணைப்பு 4.5.1 இலுள்ள தகவல் கோவையை ஓரிரு முறைகள் மாணவர்கள் நன்கு விளங்கும் வண்ணம் வாசியுங்கள்
- ஒன்றிணைந்த நிறைவாழ்வின் அவசியத்தை விளக்குங்கள்
- திருவிவிலியத்தில் ஒன்றிணைந்த நிறைவாழ்வு காணப்பட்ட சந்தர்ப்பங்களைப் பற்றி கலந்துரையாட மாணவருக்கு சந்தர்ப்பமளியுங்கள்
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் கலந்துரையாடலில் ஈடுபட வழிகாட்டுங்கள்

> - உண்மையான அன்பும், சகோதரத்துவமும் நிலவும் இடத்தில் மக்கள் வாழ்வு ஒன்றிணைந்த நிறைவாழ்வாகும் என்பது
> - மன்னிப்பும், தியாக அன்பும் ஒன்றிணைந்த நிலைவாழ்வுக்கு நம்மை இட்டுச்செல்லும் என்பது
> - பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு உள்ளிட்ட திருவிவிலியம் உண்மை அன்பு, சகோதரத்துவம், தியாக அன்பு, மன்னிப்பு போன்றவற்றை வலியுறுத்தி ஒன்றிணைந்த வாழ்வுக்கு வழிகாட்டுகின்றது என்பது

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 4.5.2

- மாணவர்களை சிறுகுழுக்களாக்குங்கள்
- குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரங்களை மாணவருக்கு வழங்குங்கள்
- தேவையான எழுது கடதாசி, நிறப்பேனா என்பவற்றை மாணவருக்கு வழங்குங்கள்
- குழுச்செயற்பாட்டை அவதானித்து உறுதிசெய்யுங்கள்
- அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கு மாணவர்களை ஆயத்தம் செய்யுங்கள்

(40 நிமிடங்கள்)

படிமுறை 4.5.3

- அறிக்கை சமர்ப்பிக்க குழுக்களை வழிப்படுத்துங்கள்
- வேறு பொருத்தமான கருத்துக்களை வெளிக்கொணர அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்
- ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைக்க ஏனைய குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்
- குழுக்களின் சிந்தனைப் பகிர்வினைத் தொகுத்து பின்வரும் கருத்துக்களை இணைத்து ஆரோக்கியமான கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்

- ஒருவரையொருவர் மதித்து, நேசித்து அனைவரும் மகிழ்ந்து வாழும் நிலை ஒன்றிணைந்த நிறைவாழ்வு ஆகும் என்பது
- இவ்வாழ்வு சவால்கள் நிறைந்த பயணம் என்பது
- பழைய ஏற்பாட்டில் ஒன்றிணைந்த நிறைவாழ்வுக்கு இட்டுச்செல்லும் கட்டளைகளும் போதனைகளும் உள்ளன
- புதிய ஏற்பாடு ஒன்றிணைந்த நிறைவாழ்வுக்கு வழிநடத்தும் சம்பவங்களையும் போதனைகளையும் கொண்டுள்ளன

(40 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. ஒன்றிணைந்த நிறைவாழ்வை சித்தரிக்கும் சித்திரம் அல்லது கவிதை ஒன்றை உருவாக்குவர்

2. பின்வரும் திருவிவிலியப் பகுதிகளில் ஒன்றிணைந்த நிறைவாழ்வுக்கு நாம் பெற்றுக்கொள்ளும் படிப்பினைகள் எவை?

| | |
|---|---|
| லேவியர் ஆகமம் | 25 |
| மீகா | 4 : 3 - 5 |
| லூக்கா | 6 : 27 - 36, 37 - 42 |
| யோவான் | 4 : 1 - 15 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தகவல் கோவை** **இணைப்பு 4.5.1**

இன, மொழி கலாச்சாரம், சமயம், வாழிடம் போன்ற பல காரணிகளை முன்வைத்து மக்கள் குழுக்களாகப் பிரிந்து செல்லும்போது போட்டி உணர்வும் பகையும் வளர்ச்சியடையும். இந்நிலை மனுக்குலத்தின் அமைதியைச் சீர்குலைத்துவிடும். இச்சீர்குலைவு நமது ஆன்மீகம் பாதிக்கப்பட்ட நிலையை வெளிப்படுத்தும்.

மக்கள் ஒன்றிணைந்து வாழ்தல் ஆன்மீகத் தேவைகளுள் பிரதானமானதாகும். யூதர்களினதும், ஆதிக்கிறிஸ்தவர்களினதும் ஒன்றிணைந்த நிறைவாழ்வு நோக்கிய பயணத்தை திருவிவிலியத்தின் பழைய, புதிய ஏற்பாடுகளில் நாம் வாசித்து அறிந்து கொள்ளலாம்.

ஒன்றிணைந்த நிறைவாழ்வு என்ற இலக்கை நோக்கிய பயணம் சவால்கள் நிறைந்தது. உதாரணமாக நீதி நியாயத்துடன் சிந்தித்தல், கருணையுள்ளத்தோடும், விட்டுக்கொடுக்கும் தன்மையுடனும், மன்னிக்கும் மனப்பாங்குடனும் செயலாற்றல் போன்ற தன்மைகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்** **இணைப்பு 4.5.2**

1. செயற்பாட்டுப்படிவம் குறித்து குழுக்கள் ஒவ்வொன்றும் அதிகம் கவனம் செலுத்துங்கள்.
2. குழுவினருடன் நன்கு கலந்துரையாடி. திட்டமிட்டு செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.
3. குழுக்களின் கருத்து வெளிப்பாடுகளை அறிக்கையாக்கி வகுப்பில் சமர்ப்பிக்க தயாராகுங்கள்.

**செயற்பாட்டுப்படிவம்**

1. ஒன்றிணைந்த நிறைவாழ்வுக்குத் தேவையான வழிநடத்தல்களை திருமறையில் இருந்து எடுத்து பட்டியல்படுத்துக.
2. ஒன்றிணைந்த நிறைவாழ்வை நோக்கிய பயணத்தில் எதிர்நோக்கும் சவால்கள் பற்றிய உரை ஒன்று ஆற்றவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி III

### 9.3.0 : கணிப்பீடும் மதிப்பீடும்

9.3.1 : கணிப்பீடும் மதிப்பீடும் விளக்கமும்

9.3.2 : கற்றல் கற்பித்தலை விரிவுபடுத்துவதற்கான கருவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.3.1 கணிப்பீடும் மதிப்பீடும் விளக்கம்

கற்றல் - கற்பித்தல் மூலம் எதிர்பார்க்கப்படும் கற்றற்பேறுகளைத் தெளிவாகப் பெற்றுக் கொள்ளுவதற்கும் மாணவர்கள் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்குமாக வகுப்பறையில் இலகுவாகச் செயற்படுத்த முடியுமான, ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட இரண்டு வேலைத்திட்டங்களாக கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் கருதலாம். கணிப்பீடு சரியான முறையில் நடைபெறுமெனின், வகுப்பில் கற்கும் ஒவ்வொரு பிள்ளையும் உரிய தேர்ச்சியின் (நிபுணத்துவத்தின்) அண்மிய மட்டத்தையாவது பெற்றுக் கொள்வது கடினமல்ல. மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுவது பிள்ளைகள் பெற்றுக்கொண்ட தேர்ச்சி எம்மட்டத்தில் காணப்படுகிறது என்பதைக் கண்டுகொள்வதாகும்.

கணிப்பீட்டைச் செயற்படுத்தும்போது ஆசிரியர் மாணவர்களுக்கு இரண்டு விதமாக வழிகாட்டல்களை வழங்கலாம். இவ்வழிகாட்டல்கள் இரண்டும் பொதுவாகப் பின்னூட்டல் (Feed Back) முன்னோக்கிய ஊட்டல் (Feed Forward) என அழைக்கப்படுகின்றன. மாணவர்களின் பலவீனம், இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின், அவர்களிடம் காணப்படும் கற்றல் தொடர்பான பிரச்சினைகளை நீக்கிக் கொள்வதற்குப் பின்னூட்டலையும், மாணவர்களின் பலம், இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின், அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு முன்னோக்கிய ஊட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையோடு சார்ந்த பொறுப்பாகும்.

கற்றல் - கற்பித்தல் செய்கையின் வெற்றி, பாடத்திட்டத்திலுள்ள தேர்ச்சிகளில் எத்தேர்ச்சிகளை மாணவர்கள் எந்த மட்டத்தில் அடைந்துள்ளனர் என்பதை அறிவதன் மூலம் இனங்காணப்படுகின்றது. கற்றல் - கற்பித்தல் செய்கையின்போது, மாணவர்கள் அடைந்த தேர்ச்சி மட்டங்களை அளவிடுவது எதிர்பார்க்கப்படுவதோடு, அடைந்த தேர்ச்சி மட்டங்கள் பற்றிய விபரங்களைப் பெற்றோர் உள்ளிட மற்றும் உரிய நபர்களுக்கும் தொடர்பாடல் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

உங்களிடம் முன் வைக்கப்பட்டுள்ள இப்பாடத்திட்டம் மாணவர் மையமான (Student Centered) தேர்ச்சி மட்ட (Competency - Based) செயற்பாடு சார்ந்த (Activity - Oriented) பிரவேசத்தைக் கொண்டது. வாழ்வைக் கருத்துள்ளதாக்கிக் கொள்வதற்கு, செயற்பாட்டினூடாகக் கற்றல் என்பது ஆசிரியரின் உருமாற்றப் பங்களிப்பில் காணப்படும் பிரதான அம்சமாகும்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளின் தொடரகத்தின் ஊடாகச் செயற்படுத்தப்படும் இப்பாடத்திட்டமானது, கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை, கணிப்பீடு - மதிப்பீடு என்பவற்றோடு ஒன்றிணைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாட்டிலும் அதன் இரண்டாம் படியில் மாணவர்கள், குழுவாக ஆய்வில் ஈடுபடும்போது அவர்களைக் கணிப்பீடு செய்வதற்கும் செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் தமது கண்டுபிடிப்புகள், பேறுகள் என்பவற்றைச் சமர்ப்பிக்கும்போது மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கும் ஆசிரியருக்கு முடியுமாகின்றது. மாணவர்கள் குழுவாக ஆய்வில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களினூடே சென்று அவர்களது வேலைகளை அவதானிப்பதன் மூலம், மாணவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை வகுப்பறையில் தீர்ப்பதற்குரிய வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவது ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றை இலகுவாகக் கொள்வதற்கு ஐந்து பொது நியதிகள் முன்வைக்கப்படுகின்றது. இந்நியதிகளில் முதன் மூன்று நியதிகளும் உரிய தேர்ச்சி மட்டத்தோடு தொடர்பான அறிவு, மனப்பாங்கு, திறன்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவும், அடுத்த இரண்டு நியதிகளும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் முக்கியமான இரண்டு திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கானதாகவும் இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஐந்து நியதிகளுடன் இணைந்ததான நடத்தை மாற்றங்கள் வகுப்பறையில் மாணவர்களிடம் காணப்படுகின்றதா என்பதைக் கண்டு கொள்வதற்கு ஆசிரியர் முயற்சி எடுக்க வேண்டியதோடு, கணிப்பீட்டின் மூலம் கண்டு கொள்ளப்படும் மாணவர்கள் பெற்றுள்ள இத்திறன்களின் அளவை மதிப்பீட்டின் மூலம் ஆசிரியர் அளந்து கொள்ள வேண்டும்.

கணிப்பீடு தொடர்பான வேலைத்திட்டங்களை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் கற்றல் கற்பித்தல் செய்கையை விரிவுபடுத்திக் கொள்ளலாம். இதற்காக முதலில் செயற்பாட்டுத் தொடரகத்தில் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளாக கணிப்பீட்டு வகைகளை அடிப்படையாகக் கொண்டதான தொகுதிகளாக வேறாக்கிக் கொள்ளுங்கள்.

மாணவர்களின் கற்றலை மலரச் செய்யக்கூடியதாக, உரிய பாட விடயத்துடன் தொடர்பான செயற்பாட்டைத் தெரிவு செய்யுங்கள். இனி, உரிய கற்றல் - கற்பித்தல் செய்கைக்கான சாதனங்களைத் தயாரித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு செயற்பாட்டின் ஆரம்பத்தில் உரிய உபகரணங்களைக் குழுக்களுக்கு வழங்க வேண்டும். கற்றல் - கற்பித்தல் சொற்பாட்டினை விரிவாக்கும்போது அவை அமையக்கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- எண்ணக்கருப்படம் (Consept Maps)
- சுவர்ப்பத்திரிகை (Wall News papers)
- புதிர்ப்போட்டி (Quizzes)
- வினாவிடைப் புத்தகம் (Question and Answer Books)
- மாணவர் செயற்பாட்டுக் கோவை (Portfolios)
- கண்காட்சி (Exhibitions)
- விவாதம் (Debates)
- குழுக் கலந்துரையாடல் (Panel Discussions)
- கருத்தரங்கு (Seminars)
- சமயோசிதப் பேச்சு (Impromtu Speech)
- நடிபங்கு (Role palys)
- இலக்கியக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தல் (Presentation of Literatue Reviews)
- வெளிக்களப் புத்தகம் / தினக் குறிப்புப் புத்தகம் / வேலைப் புத்தகம்(Field Books / Nature Diaries)
- செய்முறை சோதனை (Practical Tests)

பாட வழிகாட்டியின் மூன்றாம் பகுதி, உத்தேசக் கற்றல் - கற்பித்தல் செய்கைகளை விரிவாக்கும் வகைகளைக் கொண்ட செயற்பாடுகளையும் அதற்கான கற்றல் - கற்பித்தல் சாதனங்களையும் அறிமுகஞ் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளினுள் கணிப்பீடும், அதனோடு தொடர்பான மதிப்பீடும் இணைக்கப்பட்டுள்ளதால், கற்றல் - கற்பித்தல் செய்கை, மேலும் விரிவாக்கப்பட்டுள்ளதோடு, மாணவர்கள் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் கற்றலில் ஈடுபடுவதற்கு முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 9.3.2 கற்றல் கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள்

01. பாடசாலைத் தவணை :- முதலாம் தவணை

02. உள்ளடக்கப்பட வேண்டிய தேர்ச்சி மட்டம் :- 1 - 3

03. விடய உள்ளடக்கம் :- ஒழுக்க வாழ்வுக்கூடாக கடவுளின் படைப்புகளின் வளர்ச்சிக்கு உதவுவர்.

04. கருவியின் தன்மை :- நீதியற்ற நிருவாகத்தினால் தீமையும், நீதி நிறைந்த நிருவாகத்தினால் நாட்டிற்கு ஏற்படுகின்ற நன்மையும் மேலும் உறுதிப்படுத்துதலாகும்.

05. கருவியின் நோக்கம் :-

- தாவீது, சாமுவேல் ஆகியோரின் நிருவாகத்தைப்பற்றி ஆய்ந்தறிதல்.
- இந்த நிருவாகத்தினூடாக நாட்டுக்கும், மக்களுக்கும் ஏற்படுகின்ற நன்மை, தீமைகளைப் பற்றி கேட்டறிவர்.
- திரட்டிக்கொண்ட தகவலின் மூலம் கதைகளைக் கூறுவர்.

06. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள் (ஆசிரியருக்கானது)

- பாடத்தை ஆரம்பிப்பதற்கு முன் கருவிகளை வகுப்பில் அறிமுகப்படுத்துக
- குழுவாக தகவல்களை தேடிக்கொண்ட பின்பே கதைகளைக் கூறவேண்டுமென மாணவர்களுக்கு அறிவித்தல்
- மாணவர்களை ஐந்து குழுக்களாக வகுத்தல்
- விபரங்களை பெற்றுக் கொள்வதற்கு பரிசீலனை செய்யவேண்டிய நடவடிக்கைகளை முன்வைக்கவும்
- விபரங்களை கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பமளிக்கவும்
- குழுக்களிலிருந்து கதைகளை முன்வைப்பதற்கு மாணவர்களிடையே தெரிந்தெடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குக.
- கதைகளைக் கூறும் திகதியை மாணவர்களுக்கு அறிவியுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07. கருவியைச் செயற்படுத்துவதற்கான மாணவர்களுக்கான அலோசனைகள்

- விபரங்களைப்பற்றி தகவல் திரட்டுவதற்காக கிடைத்த தலைப்புகளை குறித்துக்கொள்க
- சரியான தகவல்களைப் பெற்றுக்கொண்டு குழுக்கள் ஒன்றாகச் சேர்ந்து கலந்துரையாடுங்கள்
- கதைகூறும் மாணவர்களை தெரிவுசெய்து கொள்ளுங்கள்
- குறித்த தினத்தில் கதையை முன்வையுங்கள்

குழு 1 - நேர்மையான நிருவாகியும் நேர்மையற்ற நிருவாகியும்

குழு 2 - எதிரியான நண்பனுக்கும் நல்லதையே செய்ய வேண்டும்

குழு 3 - கெட்ட சந்தர்ப்பத்திலும் கூட நல்ல ஒப்பந்தத்தை செய்து கொள்ள முடியும்

குழு 4 - வெற்றியடைந்த தலைவனாக இருந்தாலும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவது நேர்மையான நிருவாகியின் இலட்சணமாகும்

குழு 5 - நேர்மையான நிருவாகி ஒருவர் இருப்பது நாட்டுக்கு நன்மை தரும்

## 08. கணிப்பீட்டு முறை

| நியதிகள் / குழுக்களின் இல | | குழுக்கள் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் | தலைப்புகளின் நோக்கத்தை விளங்கிக் கொள்ளல் | தலைப்புக்கேற்ற பிழையற்ற கருத்துக்களை முன்வைத்தல் | விபரங்கள் தர்க்க ரீதியாக முன் வைத்தல் | முன்கூட்டியே முதலில் குழுக்களை வழிநடத்தல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | |
| 2 | | | | | | | |
| 3 | | | | | | | |
| 4 | | | | | | | |
| 5 | | | | | | | |

புள்ளி வழங்கும் திட்டம் -

| | | | |
|---|---|---|---|
| மிக நன்று | - | 04 | புள்ளிகள் |
| நன்று | - | 03 | புள்ளிகள் |
| சாதாரணம் | - | 02 | புள்ளிகள் |
| தேர்ச்சி பெற வேண்டும் | - | 01 | புள்ளிகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 9.3.2 கற்றல் கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள்

01. பாடசாலைத் தவணை :- இரண்டாம் தவணை

02. உள்ளடக்கப்படவேண்டிய தேர்ச்சி மட்டம் :- 2.4, 2.5

03. விடய உள்ளடக்கம் :-
- ஒளியான இயேசு மூலம் பெற்றுக்கொண்ட ஒளிக்கு சான்று பகர்வர்
- இருண்ட இடங்களை ஒளியூட்டுவர்

04. கருவியின் தன்மை :- உலகின் ஒளியான இயேசுவின் ஒளிக்கு சாட்சி பகன்ற சகேயு, சமாரியப்பெண் ஆகியோர் இருண்ட உலகை வெளிக்கொண்டு வருவதற்கு ஒளிப்பிரவாகத்தில் செயல்பட்டார்கள். அன்னை திரேசா, மார்ட்டின் லூதர் கிங் ஆகியோர் நிகழ்கால உலகத்துள் செயற்படுபவர்களான சிலரைப்பற்றி சிறிய புத்தகம் ஒன்றை நிருமாணித்தல்

05. கருவியின் நோக்கம் :-
- உலகின் ஒளி பற்றி அவதானம் செலுத்துவர்
- உலகின் இருள் பற்றி சில குறிப்புகள் குறிப்பிடுவர்
- உலகில் ஒளி ஏற்றப்பட்டதற்கான காரணங்களை விளங்கிக் கொள்வர்
- ஒளி இருளை அகற்றுவதற்கான காரணங்களை தெரிந்து கொள்வர்
- ஒளியைப் பெற்றுக் கொள்வதற்காக தியானங்களில் ஈடுபடக்கூடிய சந்தர்ப்பங்களை முன்வைப்பர்
- மேற்படி கூறப்பட்டுள்ள காரணங்கள் உள்ளடங்கக்கூடியதாக சிறிய நூல் ஒன்றை தயாரிப்பதற்கு ஆயத்தம் செய்வர்

06. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள் (ஆசிரியருக்கானது)
- செயலொழுங்குகளை நடைமுறைப்படுத்துவதற்கு முன்பு நியதிகளை மாணவர்களுக்கு முன்வையுங்கள்
- நூல் ஒன்றை தயாரித்ததின் பின் முடிவுற்றதாக அறிவியுங்கள்
- குழுக்களாக செயற்படுவதற்கும் கலந்துரையாடுவதற்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துங்கள்
- கலந்துரையாடலின்போது வெளிவந்த கருத்துக்களைப் பற்றி குறிப்பு எழுதிக் கொள்வதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. மாணவர்களுக்கான ஆலோசனைகள் :-**

- ஆசிரியரினால் வழங்கப்படுகின்ற அறிவுரைகளை நன்கு அவதானியுங்கள்
- தேவையான கருத்தை பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்
- கலந்துரையாடலில் இறுதியான முடிவுக்கு வருக
- படங்களைப் பயன்படுத்தி நூல் ஒன்றைத் தயார் செய்வர்

**08. கணிப்பீட்டு முறை**

| குழு இலக்கமும் பெயரும் நியதிகள் | | முன்வைத்தல் தொடர்பாடல் | வளங்களின் பயன்பாடு | கருத்துக்களை கோவைப் படுத்தல் | தலைமைத்துவப் பண்பு | குறிப்பிட்ட தினத்தில் உரையாற்றுதல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | |
| 2 | | | | | | | |
| 3 | | | | | | | |
| 4 | | | | | | | |
| 5 | | | | | | | |

புள்ளி வழங்கும் திட்டம்

| | | | |
|---|---|---|---|
| மிக நன்று | | 04 | புள்ளிகள் |
| நன்று | - | 03 | புள்ளிகள் |
| சாதாரணம் | - | 02 | புள்ளிகள் |
| தேர்ச்சி பெறவேண்டும் | - | 01 | புள்ளிகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 9.3.2 கற்றல் கற்பித்தலை மேலும் விரிவுபடுத்தவதற்கான கருவிகள்

01. பாடசாலைத் தவணை :- மூன்றாம் தவணை

02. உள்ளடக்கும் தேர்ச்சி மட்டம் :- 3.5, 3.7, 3.8

03. விடய உள்ளடக்கம் :-
- எரேமியாவின் சமுதாய வலுவூட்டல் அடிப்படையில் இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவர்
- மீக்காவின் சமாதான நோக்கு அடிப்படையில் இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவர்
- ஒசேயாவின் அன்பு மைய மன்னிப்பு அடிப்படையில் இறையாட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவர்

04. கருவியின் தன்மை :- யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் துன்பங்களை விளங்கிக்கொண்டு அமைதி நிறைந்த மனித நேயத்துக்காக அன்புடன் செயற்படுவது பற்றி நாடகம் ஒன்றினை நடித்துக் காட்டல்

05. கருவியின் நோக்கம் :- இறைவனின் படைப்பில் உருவான மனிதனுள் இருக்கின்ற தெய்வீகத் தன்மையை விளக்குவர்
- இறைவனின் விருப்பம் என்ன என்பதை விளங்கிக் கொள்வர்
- மீக்காவின் அமைதி காட்சியினூடாக யுத்தத்தினால் செலவாகும் செலவினை நாட்டின் அபிவிருத்திக்காக செலவழிக்கலாம் என்பது
- ஒசேயாவின் அன்பினால் மன்னிப்பை வழங்கினார் என்பது
- நிகழ்காலத்தில் கிறிஸ்து சபையின் அங்கத்தவர்களின் மூலம் இறைவனின் சிததம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது
- எரேமியாவைப்போன்று சமுதாய முன்னேற்றத்திற்கு மக்களை உற்சாகப்படுத்தப்பட வேண்டும் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள் (ஆசிரியருக்கானது)

- விபரங்கரைள சேகரித்து நாடகத்தை அரங்கேற்றுவதுடன் இக்கருவிச் செயற்பாடுகள் நிறைவுறும் என அறிவியுங்கள்
- மாணவர்களை குழுக்களாக்குங்கள்
- நாடக கருப்பொருளை உணர்த்தும் வழிகாட்டல் கருத்துக்களை குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொள்ள வழிகாட்டுங்கள்.
  இப்படிப்பினையின்போதே நிகழும் செயற்பாடுகளுக்கு கணிப்பீடு நிகழும் என்பதை மாணவர்களுக்கு வலியுறுத்துங்கள்
- விபரங்களை பெற்றுக் கொள்வதற்காக பொருத்தமான அடிப்படையைத் தேட ஊக்குவியுங்கள்
- கருவிச் செயற்படுத்தல் பற்றிய நாடக அரங்கேற்ற தினத்தை அறிவியுங்கள்

07. மாணவர்களுக்கான ஆலோசனைகள் :-

- ஆசிரியரின் ஆலோசனைகளை செவிமடுத்துக் கொள்ளுங்கள்
- கருப்பொருளுக்கு பொருத்தமான முறையில் தகவல்கள் விடயங்களை சேகரியுங்கள்
- குழு கலந்துரையாடல் மூலம் நாடகத்துக்கு தேவையான விபரங்களைக் குறித்துக் கொள்ளுங்கள்
- குறித்த தினத்தில் நாடகத்தை அரங்கேற்ற ஆயத்தமாகுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. கணிப்பீட்டு முறை

| குழு இலக்கமும் பெயரும் நியதிகள் | | நோக்கத்தை தெளிவாக உறுதிப்படுத்தல் | விபரங்களை சேகரித்தலும் செயற்படுத்தலும் | தலைமைத்துவமும் குழுச் செயற்பாடுகளும் | ஒழுங்கமைப்பும் படைப்பாற்றலும் | கருத்து வெளிப்பாடு | ஆற்றல் வெளிப்பாடு | குறிப்பிட்ட தினத்தில் அரங்கேற்றல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

புள்ளி வழங்கும் திட்டம் :

| | | | |
|---|---|---|---|
| மிக நன்று | - | 04 | புள்ளிகள் |
| நன்று | - | 03 | புள்ளிகள் |
| சாதாரணம் | - | 02 | புள்ளிகள் |
| தேர்ச்சி பெறவேண்டும் | - | 01 | புள்ளிகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ක්‍රිස්තු ධර්මය (T)- 9 ශ්‍රේණිය
ගුරු මාර්ගෝපදේශ සංග්‍රහය

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010/T/09/TIM/2000